# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

## இலங்கைத் தொலைத்தொடர்பு (திருத்தம்)

***1991 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, இலங்கைத் தொலைத்தொடர்புச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்***

*தொழினுட்ப அமைச்சர் அவர்களால் 2024, மே மாதம் 10 ஆம் திகதியன்று சமர்ப்பிக்கப்பட்டது*

*(2024, மே மாதம் 02 ஆம் திகதியன்று வர்த்தமானியில் வெளியிடப்பட்டது)*

*பாராளுமன்றத்தால் அச்சிடப்பணிக்கப்பட்டது*

[ ***257 ஆம் சட்டமூலம்*** ]

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது
கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 102.00** **தபாற் செலவு : ரூபா 150.00**

*இச்சட்டமூலத்தை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**சட்டப்பயன் பற்றிய கூற்று**

**வாசகம் 2 :** இவ்வாசகம், (இதனகத்துப்பின்னர் ''முதன்மைச் சட்டவாக்கம்'' எனக் குறிப்பீடுசெய்யப்படும்) 1991 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, இலங்கைத் தொலைத்தொடர்புச் சட்டத்தின் 4 ஆம் பிரிவைத் திருத்துகின்றது என்பதுடன் முதன்மைச் சட்டவாக்கத்துக்கு 13 ஆம் வாசகத்தினால் செய்யப்பட்ட திருத்தத்துக்கான விளைவாந்தன்மையுமாகும்.

**வாசகம் 3 :** இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 5 ஆம் பிரிவைத் திருத்துகின்றது என்பதுடன் திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது-

(அ) சந்தைப் பகுப்பாய்வை நிறைவேற்றுவதற்கும், கணிசமான சந்தை வலுவைத் தடுப்பதற்கும் மற்றும் நியாயமான போட்டியை ஊக்குவிப்பதற்கும் ஆணைக்குழுவின் தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகளை நீட்டிப்பதாகும்; அத்துடன்

(ஆ) முதன்மைச் சட்டவாக்கத்துக்கு 13 ஆம் வாசகத்தினால் செய்யப்பட்ட திருத்தத்திற்கு விளைவாந்தன்மையினவான திருத்தங்களைச் செய்வதாகும்.

**வாசகம் 4 :** இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தில் 6அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துவதன்மூலம் அச்சட்டவாக்கத்தைத் திருத்துகின்றது என்பதுடன் திருத்தத்தின் சட்டப்பயனானது காப்புவரிகளை அங்கீகரிப்பதற்கு அல்லது தீர்மானிப்பதற்கு ஆணைக்குழுவுக்குத் தத்துவமளிப்பதாகும்.

**வாசகம் 5 :** இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 7 ஆம் பிரிவைத் திருத்துகின்றது என்பதுடன் முதன்மைச் சட்டவாக்கத்துக்கு 13 ஆம் வாசகத்தினால் செய்யப்பட்ட திருத்தத்துக்கான விளைவாந்தன்மையுமாகும்.

**வாசகம் 6 :** இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 8 ஆம் பிரிவைத் திருத்துகின்றது என்பதுடன் முதன்மைச் சட்டவாக்கத்துக்கு 13 ஆம் வாசகத்தினால் செய்யப்பட்ட திருத்தத்துக்கான விளைவாந் தன்மையுமாகும்.

**வாசகம் 7 :** இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 9 ஆம் பிரிவைத் திருத்துகின்றது என்பதுடன், முதன்மைச் சட்டவாக்கத்துக்கு 13 ஆம் வாசகத்தினால் செய்யப்பட்ட திருத்தத்துக்கான விளைவாந் தன்மையுமாகும்.

**வாசகம் 8 :** இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தில் 9அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துவதன்மூலம் அச்சட்டவாக்கத்தைத் திருத்துகின்றது என்பதுடன், திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது போட்டிக்கெதிரான செயல்முறைகள் முதலியன பற்றிய பிணக்குகளைத் தீர்ப்பதற்கு ஆணைக்குழுவுக்குத் தத்துவமளிப்பதாகும்.

**வாசகம் 9 :** இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தில் 10 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவை உடனடுத்து (1அ) மற்றும் (1ஆ) என்னும் புதிய உட்பிரிவுகளை உட்புகுத்துவதன்மூலம் அச்சட்டவாக்கத்தின் 10 ஆம் பிரிவைத் திருத்துகின்றது என்பதுடன், திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது வானொலி அதிர்வெண் அலைக்கற்றையைப் பிரித்தொதுக்குவதற்கான அனுமதிகளை வழங்குதல் எனும் வழிவகைமூலம் அவ்வாறு பிரித்தொதுக்குவதற்கு ஆணைக்குழுவுக்குத் தத்துவமளிப்பதாகும்.

**வாசகம் 10 :** இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தில் 10அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துவதன்மூலம் அச்சட்டவாக்கத்தைத் திருத்துகின்றது என்பதுடன் திருத்தத்தின் சட்டப்பயனானது இலக்கங்களின் பயன்பாட்டைக் குறித்தொதுக்குவதற்கான தனியதிகாரியாக ஆணைக்குழுவை இருக்கச்செய்வதும் மற்றும் அதுசார்பில் ஆணைக்குழுவுக்கு குறித்தசில தத்துவங்களை அளிப்பதுமாகும்.

**வாசகம் 11** : இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 11 ஆம் பிரிவைத் திருத்துகின்றது என்பதுடன் திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது-

(அ) முதன்மைச் சட்டவாக்கத்துக்கு 13 ஆம் வாசகத்தினால் செய்யப்பட்ட திருத்தத்திற்கு விளைவாந்தன்மையினவான திருத்தங்களைச் செய்வதாகும்; அத்துடன்

(ஆ) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவின்கீழ் ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட கட்டளைகளுக்கு இணங்கியொழுகாத ஆட்கள்மீது தண்டங்களை விதிப்பதற்கு ஆணைக்குழுவுக்குத் தத்துவமளிப்பதற்கும் மற்றும் தவணைதவறுகையில் அத்தகைய ஏதேனும் தண்டத்தை அறவிடும் முறையைக் குறித்துரைப்பதற்குமென அப்பிரிவில் (6), (7), (8), (9), (10) மற்றும் (11) என்னும் புதிய உட்பிரிவுகளை உட்புகுத்துவதாகும்.

**வாசகம் 12** : இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 17 ஆம் பிரிவைத் திருத்துகின்றது என்பதுடன் திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது-

(அ) முதன்மைச் சட்டவாக்கத்துக்கு 13 ஆம் வாசகத்தினால் செய்யப்பட்ட திருத்தத்திற்கு விளைவாந்தன்மையினவான திருத்தங்களைச் செய்வதாகும்; அத்துடன்

(ஆ) முதன்மைச் சட்டவாக்கத்தின் 17 ஆம் பிரிவின்கீழ் உரிமமொன்று வழங்கப்பட்டுள்ள இயக்குநர்களுக்குப் பணிப்புக்களை வழங்குவதற்கு ஆணைக்குழுவுக்குத் தத்துவமளிப்பதாகும்.

**வாசகம் 13** : இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 17 ஆம் பிரிவை உடனடுத்து 17அ மற்றும் 17ஆ என்னும் புதிய பிரிவுகளை உட்புகுத்துவதன்மூலம் அச்சட்டவாக்கத்தைத் திருத்துகின்றது என்பதுடன், திருத்தத்தின் சட்டப்பயனானது-

(அ) பிரிவு 17 இன்கீழ் வழங்கப்பட்ட உரிமமொன்றை இல்லாதொழிப்பதற்கு அமைச்சருக்குத் தத்துவமளிப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்வதாகும்; அத்துடன்

(ஆ) எவரேனுமாளை, ஆணைக்குழுவிடமிருந்து உரிமமொன்றைப் பெற்றுக்கொள்ளாமல் குறித்தசில உட்கட்டமைப்பு சேவைகள், தொலைத்தொடர்புச் சேவைகள் மற்றும் கம்பிவட இடுகை நிலைய வசதிகள் ஆகியவற்றை வழங்குவதில் ஈடுபடுவதிலிருந்து தடுப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்வதாகும்.

**வாசகம் 14** : இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 18 ஆம் பிரிவைத் திருத்துகின்றது என்பதுடன் திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது முதன்மைச் சட்டவாக்கத்தின் 17 ஆம் பிரிவின்கீழ் வழங்கப்பட்ட உரிமமொன்றைத் திரிபுபடுத்துவதற்கு ஆணைக்குழுவுக்குத் தத்துவமளிப்பதாகும்.

**வாசகம் 15** : இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 18அ என்னும் பிரிவைத் திருத்துகின்றது என்பதுடன் திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது-

(அ) முதன்மைச் சட்டவாக்கத்துக்கான 13 ஆம் வாசகத்தினால் முதன்மைச் சட்டவாக்கத்துக்குச் செய்யப்பட்ட திருத்தத்திற்கு விளைவாந்தன்மையினவான திருத்தங்களைச் செய்வதாகும்; அத்துடன்

(ஆ) பிரிவு 18அ இன் ஏற்பாடுகளை மீறுகின்ற இயக்குநர் ஒருவர்மீது விதிக்கப்படவேண்டிய குற்றப்பணத்தொகையை பத்தாயிரம் ரூபாவிலிருந்து ஒரு இலட்சம் ரூபா வரை அதிகரிப்பதாகும்.

**வாசகம் 16 :** இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 20 ஆம் பிரிவை உடனடுத்து 20அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துவதன் மூலம் அச்சட்டவாக்கத்தைத் திருத்துகின்றது என்பதுடன் திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது பின்வருவனவற்றுக்கான ஏற்பாடுகளைச் செய்வதாகும்-

(அ) இடைத்தொடுப்பு உடன்படிக்கைகளைச் செய்ய இயக்குநர்களுக்கான ஒழுங்கேற்பாடுகளை மேற்கொள்வதற்கு ஆணைக்குழுவுக்குத் தத்துவமளித்தல்;

(ஆ) இடைத்தொடுப்பு உடன்படிக்கையொன்றின் திறத்தவர்களாகவுள்ள இயக்குநர்களின் போட்டிக்கெதிரான செயல்முறைகள் பற்றி புலனாய்வு செய்வதற்கு ஆணைக்குழுவுக்குத் தத்துவமளித்தல்; அத்துடன்

(இ) இடைத்தொடுப்பு விகிதங்கள் தொடர்பில் விதிகளை ஆக்குவதற்கும் மற்றும் இடைத் தொடுப்பு உடன்படிக்கைகளை நடைமுறைப்படுத்துவதற்காகவும் ஆணைக்குழுவுக்குத் தத்துவமளித்தல்.

**வாசகம் 17 :** இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 21 ஆம் பிரிவைத் திருத்துகின்றது என்பதுடன் திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது-

(அ) தொலைத்தொடர்பு உபகரணங்களின் ஏற்றுமதி தொடர்பில் 21 ஆம் பிரிவினது ஏற்பாடுகளின் ஏற்புடைமையை விசாலிப்பதாகும்; அத்துடன்

(ஆ) அப்பிரிவின் ஏற்பாடுகளினது மீறுகைக்கான தண்டத்தை அதிகரிப்பதற்கென அப்பிரிவின் (5) ஆம் உட்பிரிவைத் திருத்துவதாகும்.

**வாசகம் 18 :** இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 22 ஆம் பிரிவைத் திருத்துவதுடன் திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயனானது பின்வருவனவற்றைச் செய்வதற்கு ஆணைக்குழுவின் தத்துவத்தை விசாலிப்பதாகும்:-

(அ) வானொலி அதிர்வெண் வெளியேற்றுகின்ற உபகரணத்தை உடைமையில் வைத்திருப்ப தற்கான உரிமங்களை வழங்குவதற்கும்;

(ஆ) அப்பிரிவின்கீழ் வழங்கப்பட்ட உரிமங்களை மீளப்பெறுவதற்கும் அல்லது வேறுபடுத்து வதற்கும்; அத்துடன்

(இ) பொதுமக்கள் நலன்கருதியும் ஏதேனும் வானொலி அதிர்வெண்ணின் பொதுவான பாவனையை மேம்படுத்துவதற்கெனவும், அப்பிரிவின்கீழ் உரிமமொன்றைப் பெற்றுக் கொள்வதிலிருந்து எவரேனுமாளுக்கு அல்லது எவரேனும் வகுப்பினரான ஆட்களுக்கு விலக்களிப்பதற்கென விதிகளை ஆக்குவதற்கும்.

**வாசகம் 19 :** இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 22அ என்னும் பிரிவைத் திருத்துவதுடன் திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயனானது பின்வருவனவற்றைச் செய்வதாகும்:-

(அ) இலங்கையின் நிலம், வீதிகள் அல்லது ஆள்புல நீர்ப்பரப்புகள் என்பவற்றின்மீது, அல்லது அவற்றின்கீழ் கம்பிவடமிடுகின்ற வேலையைப் புரிவதற்கான உரிமங்களை வழங்குவதற்கு ஆணைக்குழுவின் தத்துவத்தை விசாலிப்பதாகும்; அத்துடன்

(ஆ) பிரிவு 22அ வின்கீழ் வழங்கப்பட்ட உரிமமொன்றை ஆணைக்குழு எந்தக் குறித்தசில புதிய ஏதுக்களின்கீழ் இல்லாதொழிக்கலாமோ அந்தக் குறித்தசில புதிய ஏதுக்களை அறிமுகப் படுத்துவதாகும்.

**வாசகம் 20** : இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 22அ என்னும் பிரிவை உடனடுத்துப் புதிய 22அஅ, 22அஆ, 22அஇ மற்றும் 22அஈ என்னும் பிரிவுகளை உட்புகுத்துவதன்மூலம் அச்சட்டவாக்கத்தைத் திருத்துவதுடன் திருத்தத்தின் சட்டப்பயனானது பின்வருமாறாகும்:-

(அ) இலங்கைக் கடற்படை, கரையோரக் காவல் திணைக்களம் மற்றும் இலங்கைப் பொலிசாரின் உதவியுடன் இச்சட்டத்தின்கீழ் ஏதேனும் தொலைத்தொடர்புச் சேவையை வழங்குதல் சம்பந்தமாக இலங்கையின் ஆள்புலநீர்ப்பரப்புகளினுள் இடப்பட்ட கடலடிக் கம்பிவடங்களைக் கண்காணித்தல், முகாமைசெய்தல் மற்றும் பாதுகாத்தல் என்பவற்றுக்குத் தத்துவமளிப்பதாகும்;

(ஆ) கடலடிக் கம்பிவடங்கள் முதலியவற்றைக் கண்காணித்தல், முகாமைசெய்தல் மற்றும் பாதுகாத்தலில் ஆணைக்குழுவுக்கு மதியுரையளிப்பதற்குத் தேசியக் கடலடிக் கம்பிவடப் பாதுகாப்புக் குழுவை நியமிப்பதாகும்;

(இ) ஒரு கடலடிக் கம்பிவடம் மற்றும் கடலடிக் கம்பிவட இடுகை நிலையங்கள் தொடர்பாக, வர்த்தமானியில் வெளியிடப்படும் பிரகடனத்தின்மூலம் பாதுகாப்பு வலயங்களைச் சனாதிபதி வெளிப்படுத்துவதனை இயலச்செய்வதாகும்;

(ஈ) எவையேனும் பாதுகாப்பு வலயங்களில், அவற்றின்மீது அல்லது அவற்றின்கீழ் நிறைவேற்றப்படுவதற்குத் தடைசெய்யப்பட்ட செயற்பாடுகளைக் குறித்துரைப்பதற்கான விதிகளை ஆக்குவதற்கு ஆணைக்குழுவுக்குத் தத்துவமளிப்பதாகும்; அத்துடன்

(உ) பிரிவு 22அஇ என்பதன்கீழான தவறொன்றைப் புரிகின்ற அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் விதியை மீறுகின்ற எவரேனுமாளை, ஆள்புலநீர்ப்பரப்புகளில் அல்லது ஒரு பாதுகாப்பு வலயத்தினுள் உட்பட இலங்கையினுள் பிடியாணையின்றிக் கைதுசெய்வதற்கு அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்களுக்குத் தத்துவமளிப்பதாகும்.

**வாசகம் 21** : இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 22ஊ என்னும் பிரிவைத் திருத்துவதுடன் 11 ஆம் பிரிவினால் முதன்மைச் சட்டவாக்கத்துக்குச் செய்யப்பட்ட திருத்தத்தின் விளைவாந் தன்மையினதாகும்.

**வாசகம் 22** : இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 22ஒ என்னும் பிரிவை உடனடுத்துப் புதிய பாகம் IIஇ யை உட்புகுத்துவதன்மூலம் அச்சட்டவாக்கத்தைத் திருத்துவதுடன் திருத்தத்தின் சட்டப்பயனானது ஓர் இயக்குநரினால் அல்லது வழங்குநரினால் அல்லது உரிமம்பெற்றவரினால் பிரிவு 17, 17ஆ, 21 அல்லது 22 இன்கீழ் செலுத்தப்படவேண்டிய உரிமக்கட்டணத்தின்மீது அல்லது பிரிவு 22எ இன்கீழ் ஓர் இயக்குநரினால் செலுத்தப்படவேண்டிய ஆயவரியின்மீது, விடயத்துக்கேற்ப, உரிமக்கட்டணம் அல்லது ஆயவரி அத்தகைய எவரேனும் இயக்குநரினால் அல்லது வழங்குநரினால் செலுத்தப்படுவதில் தவணைதவறுகை புரியப்படும் பட்சத்தில் மிகைக்கட்டணமொன்றை விதிப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்வதாகும்.

**வாசகம் 23** : இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 33, 34 மற்றும் 35 ஆம் பிரிவுகளைத் திருத்துவதுடன் 13 ஆம் பிரிவினால் முதன்மைச் சட்டவாக்கத்துக்குச் செய்யப்பட்ட திருத்தத்தின் விளைவாந்தன்மையினதாகும்.

**வாசகம் 24** : இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 35 ஆம் பிரிவை உடனடுத்து 35அ, 35ஆ என்னும் பிரிவுகளை உட்புகுத்துவதன்மூலம் அச்சட்டவாக்கத்தைத் திருத்துவதுடன் திருத்தத்தின் சட்டப்பயனானது இயக்குநர்கள் தம்மிடையேயும் வேறு குழுக்களுடனும் வசதிகளையும் வளங்களையும் பகிர்வதற்கு அவர்களை இயலச்செய்வதற்கான ஏற்பாடுகளைச் செய்வதாகும்.

**வாசகம் 25 :** இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 36 ஆம், 37 ஆம் பிரிவுகளைத் திருத்துவதுடன் 13 ஆம் பிரிவினால் முதன்மைச் சட்டவாக்கத்துக்குச் செய்யப்பட்ட திருத்தத்தின் விளைவாந்தன்மையினதாகும்.

**வாசகம் 26 :** இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 38 ஆம் பிரிவைத் திருத்துவதுடன் 13 ஆம் வாசகத்தினாலும் 24 ஆம் வாசகத்தினாலும் முதன்மைச் சட்டவாக்கத்துக்குச் செய்யப்பட்ட திருத்தங்களின் விளைவாந்தன்மையினதாகும்.

**வாசகம் 27 :** இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 39 ஆம், 40 ஆம் பிரிவுகளைத் திருத்துவதுடன் 13 ஆம் பிரிவினால் முதன்மைச் சட்டவாக்கத்துக்குச் செய்யப்பட்ட திருத்தங்களின் விளைவாந்தன்மையினதாகும்.

**வாசகம் 28 :** இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 43 ஆம் பிரிவைத் திருத்துவதுடன் முதன்மைச் சட்டவாக்கத்தில் 22அஇ மற்றும் 22அஈ என்னும் புதிய பிரிவுகளை உட்புகுத்துவதன்மூலம் 20 ஆம் வாசகத்தினால் அச்சட்டவாக்கத்துக்குச் செய்யப்பட்ட திருத்தத்தின் விளைவாந்தன்மை யினதாகும்.

**வாசகம் 29 :** இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 44 ஆம் பிரிவைத் திருத்துவதுடன் திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயனானது-

(அ) 19 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழான அல்லது 22 ஆம் பிரிவின்கீழான தவறொன்றுக்குக் குற்றவாளியாகவுள்ள ஆளொருவர்மீது விதிக்கப்படவேண்டிய தண்டனையை அதிகரிப்பதுடன் தவறானது தொடர்ந்துபுரியப்படும் பட்சத்தில் மேலதிகக் குற்றப்பணமொன்றை அறிமுகப்படுத்துவதாகும்;

(ஆ) 19 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழான தவறொன்று புரியப்படுவதற்காகப் பயன்படுத்தப்பட்ட தொலைத்தொடர்பு உபகரணம் நீதிவானினால் பறிமுதல் செய்யப்படுவதற்கான ஏற்பாடுகளைச் செய்வதாகும்; அத்துடன்

(இ) 17ஆ என்னும் பிரிவின்கீழான தவறொன்றுக்குக் குற்றவாளியாகவுள்ள ஆளொருவருக்கான தண்டத்தை அறிமுகப்படுத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்வதாகும்.

**வாசகம் 30 :** இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 46 ஆம் பிரிவை உடனடுத்து 46அ, 46ஆ, 46இ என்னும் புதிய பிரிவுகளை உட்புகுத்துவதன்மூலம் அச்சட்டவாக்கத்தைத் திருத்துவதுடன் திருத்தத்தின் சட்டப்பயனானது-

(அ) ஒரு தொலைத்தொடர்பு முறைமையுடன் தலையிடுவதனை, அதனைத் துண்டிப்பதனை அல்லது குழப்புவதனைத் தவறொன்றாக்குவதாகும்;

(ஆ) ஆளொருவரை ஏமாற்றுவதற்கு அல்லது பிறழ்வழியுய்ப்பதற்கு ஒரு தொலைத்தொடர்பு முறைமையைப் பயன்படுத்துவதனைத் தவறொன்றாக்குவதாகும்; அத்துடன்

(இ) ஒரு தொலைத்தொடர்புச் சேவையின் பாவனையாளரின் ஆளடையாளம் பற்றிப் பொய்யான தகவல்களை வழங்குதலைத் தவறொன்றாக்குவதாகும்.

**வாசகம் 31 :** இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 47 ஆம் பிரிவைத் திருத்துவதுடன் திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயனானது முதன்மைச் சட்டவாக்கத்தில் 22அஇ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துவதன்மூலம் 20 ஆம் வாசகத்தினால் செய்யப்பட்ட திருத்தத்திற்கு விளைவாந் தன்மையினவான திருத்தங்களைச் செய்வதாகும் என்பதுடன் கடலடிக் கம்பிவடத்தை அல்லது கடலடிக் கம்பிவட இடுகை நிலையம் முதலியவற்றைச் சேதப்படுத்துவதற்கான தவறுக்குக் குற்றவாளியாகவுள்ள ஆளொருவருக்கான தண்டத்தை அறிமுகப்படுத்துவதற்கு ஏற்பாடுகளைச் செய்வதாகும்.

***வாசகம் 32*** : இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 59 ஆம் பிரிவைத் திருத்துவதுடன் திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயனானது-

(அ) விடாப்பிடியாக ஒரு தொலைபேசியைப் பயன்படுத்திச் செய்திகளை அனுப்புவதனை அல்லது கடத்துவதனை அல்லது வேறு ஒப்பப்பணஞ்செலுத்துநர்களின் தொலைபேசி இலக்கங்களை வெளியிடுவதனை, அனுப்புவதனை அல்லது கடத்துவதனைத் தவறொன் றாக்குவதாகும்; அத்துடன்

(ஆ) அப்பிரிவின்கீழான தவறொன்றைப் புரிவதற்காகப் பயன்படுத்தப்பட்ட தொலைபேசித் தொடுப்புகளைத் துண்டிப்பதற்கு ஒரு தொலைத்தொடர்பு அலுவலரை இயலச்செய்வ தற்கான ஏற்பாட்டைச் செய்வதாகும்.

***வாசகம் 33*** : இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 59 ஆம் பிரிவை உடனடுத்து 59அ, 59ஆ என்னும் புதிய பிரிவுகளை உட்புகுத்துவதன்மூலம் அச்சட்டவாக்கத்தைத் திருத்துவதுடன் திருத்தத்தின் சட்டப்பயனானது-

(அ) ஒரு தொலைபேசியைப் பயன்படுத்திப் பொதுமக்களிடையே கிளர்ச்சியை விளைவித்தல் அல்லது பொதுமக்கள் அமைதியைக் குலைத்தல் என்பவற்றைத் தவறொன்றாக்குவதற்கான ஏற்பாட்டைச் செய்வதாகும் மற்றும் அவற்றுக்கான தண்டத்தைக் குறித்துரைப்பதாகும்; அத்துடன்

(ஆ) ஆணைக்குழுவுக்கு அல்லது ஆணைக்குழுவுக்கு உதவுவதற்கு நியமிக்கப்பட்ட வேறெவரேனும் அலுவலருக்குப் பொய்யான அல்லது பிழைவழியுய்க்கும் தகவல்களைக் கொடுத்தலை அல்லது கொடுக்கச்செய்தலைத் தவறொன்றாக்குவதற்கான ஏற்பாடு செய்வதாகும் மற்றும் அதற்கான தண்டத்தைக் குறித்துரைப்பதாகும்.

***வாசகம் 34*** : இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 65 ஆம் பிரிவைத் திருத்துவதுடன் திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயனானது முதன்மைச் சட்டவாக்கத்தின்கீழான தவறொன்றைப் புரிவதற்காகப் பயன்படுத்தப்பட்ட தொலைத்தொடர்பு உபகரணத்தை இழப்பிக்கச் செய்வதற்கு நீதிவானுக்குத் தத்துவமளிப்பதாகும்.

***வாசகம் 35*** : இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 68 ஆம் பிரிவைத் திருத்துவதுடன் திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயனானது பின்வரும் நோக்கத்துக்காக விதிகளை ஆக்குவதற்கான ஆணைக்குழுவின் தத்துவத்தை விசாலிப்பதாகும்:-

(அ) முறையான இயக்குநர்கள், வழங்குநர்கள் மற்றும் உரிமம்பெறுநர்களுக்கு ஏற்புடையற் பாலனவான செயல்முறைக் கோவைகளை வகுத்தமைத்தல்; அத்துடன்

(ஆ) இயக்குநர்கள், வழங்குநர்கள் மற்றும் உரிமம்பெறுநர்களினால் கடைப்பிடிக்கப்படவேண்டிய வழிகாட்டுநெறிகளைக் காலத்துக்குக்காலம் வழங்குதல்; அத்துடன்

(இ) வானொலி அதிர்வெண் நோக்கெல்லையை முகாமைசெய்தல்.

***வாசகம் 36*** : இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 73 ஆம் பிரிவைத் திருத்துவதுடன் திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயனானது "தரைப்படை", "கம்பிவட இடுகை நிலையம்", "கரையோரக் காவல் திணைக்களம்", "பிரத்தியேகப் பொருளாதார வலயம்", "உட்கட்டமைப்பு", "ஆள்", "பொலிசு அலுவலர்", "வழங்குநர்", "வானொலி அணுகுகை வலைத்தளம்", "வானொலி அதிர்வெண் வெளியேற்றுகின்ற உபகரணம்", "இலங்கை வான்படை", "இலங்கைக் கடற்படை" மற்றும் "கடலடிக் கம்பிவடம்" என்னும் சொல்லமைப்புகளுக்காக அப்பிரிவில் புதிய வரைவிலக்கணங்களைச் சேர்ப்ப தற்கான ஏற்பாடுகளைச் செய்வதாகும்.

ச.வ.- ஓ. 9/2024

**1991 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, இலங்கைத் தொலைத்தொடர்புச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

**1.** இச்சட்டம், 2024 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, இலங்கைத் தொலைத்தொடர்பு (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். *சுருக்கப் பெயர்*

*1991 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கச் சட்டத்தின் 4 ஆம் பிரிவைத் திருத்துதல்*

**2.** (இதனகத்துப்பின்னர் ''முதன்மைச் சட்டவாக்கம்'' எனக் குறிப்பீடு செய்யப்படும்) 1991 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, இலங்கைத் தொலைத்தொடர்புச் சட்டத்தின் 4 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) ''அவர் எண்ணும்'' மற்றும் ''அவரின் தத்துவங்களைப்'' என்னும் சொற்களுக்குப் பதிலாக முறையே ''அது எண்ணும்'' மற்றும் ''அதன் தத்துவங்களைப்'' என்னும் சொற்களை இடுவதன்மூலமும்;

(2) அதன் (ஆ) என்னும் பந்தியில், ''இயக்குநரும்'' என்னும் சொல்லுக்குப் பதிலாக, ''இயக்குநரும் மற்றும் வழங்குநரும்'' என்னும் சொற்களை இடுவதன்மூலமும்; அத்துடன்

(3) அதன் (ஊ) என்னும் பந்தியில், ''இயக்குநர்களுக்கு'' என்னும் சொல்லுக்குப் பதிலாக, ''இயக்குநர்களுக்கும் மற்றும் வழங்குநர்களுக்கும்'' என்னும் சொற்களை இடுவதன்மூலமும்.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 5 ஆம் பிரிவைத் திருத்துதல்*

**3.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 5 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அதன் (ஆ) என்னும் பந்தியில், ''தொலைத்தொடர்பை இயக்குவதற்கான'' என்னும் சொற்களுக்குப் பதிலாக,

"இயக்குநர்களுக்கான" என்னும் சொல்லை இடுவதன் மூலமும்;

(2) அதன் (ஈ) என்னும் பந்தியில், "இயக்குநர் ஒருவரால்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "இயக்குநர் ஒருவராலும் மற்றும் வழங்குநர் ஒருவராலும்" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்;

(3) அதன் (எ) மற்றும் (ஏ) என்னும் பந்திகளில், "இயக்குநரைப்" மற்றும் "இயக்குநர்கள்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, முறையே "இயக்குநரையும் மற்றும் வழங்குநரையும்" மற்றும் "இயக்குநர்களும் மற்றும் வழங்குநர்களும்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(4) அதன் (ஓ) என்னும் பந்தியில்–

(அ) "அத்தகைய இறுப்புகளைத் தீர்மானிப்பதற்கான முறைகளை அமைச்சருடனான ஆலோசனையுடன் தீர்மானித்தல்;" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "அத்தகைய இறுப்புகளை அல்லது அத்தகைய இறுப்புகளை அங்கீகரிப்பதற்கான அல்லது தீர்மானிப்பதற்கான முறைகளை 6அ என்னும் பிரிவின்கீழ் அமைச்சருடனான கலந்தாலோசனையுடன் அங்கீகரித்தல் அல்லது தீர்மானித்தல்;" என்னும் சொற்களையும் எண்ணையும் இடுவதன் மூலமும்; அத்துடன்

(ஆ) "இயக்குநர்களினால்" மற்றும் "இயக்குநர்களின்" என்னும் சொற்கள் அப்பந்தியில் காணப்படும் இடங்களிலெல்லாம் அவற்றுக்குப் பதிலாக, "இயக்குநர்களினாலும் வழங்குநர்களினாலும்" மற்றும் "இயக்குநர்களின் அத்துடன் வழங்குநர்களின்" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்;

(5) அதன் (க) என்னும் பந்தியில், ''இயக்குநர்களைத்'' என்னும் சொல்லுக்குப் பதிலாக, ''இயக்குநர்களையும் மற்றும் வழங்குநர்களையும்'' என்னும் சொற்களை இடுவதன்மூலமும்;

(6) அதன் (ண) என்னும் பந்தியில், ''இயக்குநர்களினால்'' என்னும் சொல்லுக்குப் பதிலாக, ''இயக்குநர்களினால் மற்றும் வழங்குநர்களினால்'' என்னும் சொற்களை இடுவதன்மூலமும்;

(7) அதன் (ய) என்னும் பந்தியில், ''இணங்கியொழுகுவதனை வலுவுக்கிடுதலும்; அத்துடன்'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, ''இணங்கியொழுகுவதனை வலுவுக்கிடுதலும்;'' என்னும் சொற்களை இடுவதன்மூலமும்; அத்துடன்

(8) அதன் (ய) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்திகளை உட்புகுத்துவதன்மூலமும்:-

''(யஅ) குறித்தவொரு சந்தையிலுள்ள போட்டியின் அளவைப் புரிந்துகொள்வதற்கென அச்சந்தையின் இயங்குநிலையைச் சோதிக்கும்பொருட்டு தொலைத்தொடர்புச் சேவைகளின் வழங்குகையில் சந்தைப் பகுப்பாய்வை நிறைவேற்றுதல்;

(யஆ) கணிசமான சந்தை வலுவின் வெளிப்பாட்டை அல்லது துர்ப்பிரயோகத்தைத் தடுப்பதற்கென இடையீடுசெய்தல்;

(யஇ) நியாயமான போட்டியை ஊக்குவித்தல் மற்றும் போட்டிக்கெதிரான செயல்முறைகளை இல்லாதொழித்தல் என்பவற்றின் பொருட்டு ஒழுங்காக்கல் வழிவகைகளை எடுத்தல்;'';

(யஈ) சேவையின் குறித்துரைக்கப்பட்ட குறைந்தபட்ச அளவின் உலகளாவிய கிடைக்கக்கூடியதன்மை போன்ற துறைக்கான சமூகக் கொள்கைசார் குறிக்கோள்களை

எய்துவதற்குத் தோதானவையும் அவசிய மானவையுமென ஆணைக்குழு கருதுகின்ற அத்தகைய வழிமுறைகளை எடுத்தல் அல்லது அத்தகைய பணிப்புக்களை வழங்குதல்; அத்துடன்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தில் 6அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்*

**4.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 6 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுவதுடன் இது அச்சட்டவாக்கத்தின் 6அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும்:-

"*ஆணைக்குழு காப்புவரியை அங்கீகரித்தல் அல்லது தீர்மானித்தல்*

6அ. (1) ஆணைக்குழு, பின்வரும் கோட்பாடுகளின் அடிப்படையில் காப்புவரிகளை அங்கீகரித்தல் அல்லது தீர்மானித்தல் வேண்டும்:-

(அ) காப்புவரிகள் பாரபட்சமற்றவையாக இருத்தல் வேண்டும்; அத்துடன்

(ஆ) காப்புவரிகள் ஆகுசெலவைச் சார்ந்தவையாக இருத்தல் வேண்டும், பொதுவாக கலப்பு மானியங்கள் இல்லாதொழிக்கப்படுதல் வேண்டும்.

(2) இயக்குநரொருவர் அல்லது வழங்குநரொருவர் (1) ஆம் உட்பிரிவின் (அ) மற்றும் (ஆ) என்னும் பந்திகளுக்கமைய, காப்புவரிகளை அல்லது காப்புவரிகளுக்கான சீராக்கல்களை முன்மொழியலாம்.

(3) இயக்குநரொருவர் அல்லது வழங்குநரொருவர் காப்புவரிகளை அல்லது காப்புவரிகளின் சீராக்கலை முன்மொழிகின்றவிடத்து, ஆணைக்குழு பின்வருவனவற்றைக் கருத்திற்கொண்டு (1) ஆம்

உட்பிரிவுக்கமைய அத்தகைய காப்புவரிகளையும் காப்புவரிகளின் சீராக்கலையும் அங்கீகரிக்கலாம் அல்லது நிராகரிக்கலாம் –

(அ) அரசாங்கக் கொள்கை மற்றும் கைத்தொழிற்றுறை தேவைப்பாடுகள்; அத்துடன்

(ஆ) குறித்தவொரு பயனர் வகுப்பினருக்கு அல்லது குறித்தவொரு இடப்பரப்பில் இயக்குநரினால் அல்லது வழங்குநரினால் வழங்கப்பட்ட வசதிகள் அல்லது சேவைகள்:

ஆயின் எவ்வாறாயினும், ஆணைக் குழுவானது முன்மொழியப்பட்ட காப்புவரியொன்றை அல்லது இயக்குநரொருவரினால் அல்லது வழங்குநரொருவரினால் முன்மொழியப்பட்ட காப்புவரிகளுக்கான சீராக்கலொன்றை பகுதியளவில் அங்கீகரிக்கலாம் அல்லது ஆணைக்குழுவினால் விதிக்கப்பட்ட அத்தகைய நிபந்தனைகளுக்கமைய அத்தகைய அங்கீகாரத்தை வழங்கலாம்.

(4) ஆணைக்குழு, அத்தகைய நிபந்தனைகளுக்கமைய அல்லது நிபந்தனைகளில்லாமல், ஏதேனும் சேவையின் காப்புவரிகள் எவற்றினதும் முழுமையில் அல்லது அவற்றின் பாகமொன்றில் அத்தகைய காப்புவரிகளைத் தவிர்ப்பதற்குத் தீர்மானிக்கலாம்.

(5) ஆணைக்குழுவானது, அமைச்சருடனான கலந்தாலோசனையுடன், விதிகள் என்றவகையில் விசேட காப்புவரித் திட்டமொன்றுக்கான ஏற்பாட்டைச் செய்யலாம்; அத்திட்டம் பொதுவாக அல்லது இயக்குநரொருவரினால் அல்லது வழங்குநரொருவரினால் வழங்கப்பட்ட ஏதேனும்

குறிப்பிட்ட தொலைத்தொடர்புச் சேவைக்காக காப்புவரி பற்றிய சீராக்கல்களை அமைத்தல், மீளாய்வுசெய்தல், வெளியிடுதல், அங்கீகரித்தல் ஆகிய முறைகளை உள்ளடக்குதல் வேண்டும்.

(6) இயக்குநரொருவர் அல்லது வழங்குநரொருவர் இப்பிரிவின்கீழ் ஆணைக்குழுவிடமிருந்து காப்புவரித் திட்டமொன்றுக்கான அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளாமல் தொலைத்தொடர்புச் சேவை எதனையும் வழங்குதலாகாது.

(7) ஆறாம் உட்பிரிவின் ஏற்பாடுகளை மீறுகின்ற இயக்குநர் அல்லது வழங்குநர் ஒவ்வொருவரும் தவறொன்றைப் புரிகின்றார் என்பதுடன் நீதிவானொருவரினால் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல் பத்து மில்லியன் ரூபாவை விஞ்சாத குற்றப் பணமொன்றுக்கு அல்லது ஓராண்டை விஞ்சாத காலப்பகுதியொன்றுக்கான இருவகையில் ஒருவகை மறியற்றண்டனையொன்றுக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம் மற்றும் மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும்.".

**5.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 7 ஆம் பிரிவு, அப்பிரிவில் "இயக்குநர்" என்னும் சொல் காணப்படுகின்ற இடங்களிலெல்லாம் அச்சொல்லுக்குப் பதிலாக, "விடயத்துக்கேற்ப, இயக்குநர் அல்லது வழங்குநர்" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 7 ஆம் பிரிவைத் திருத்துதல்*

**6.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 8 ஆம் பிரிவு, "ஒவ்வோர் இயக்குநரும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "ஒவ்வோர் இயக்குநரும் மற்றும் வழங்குநரும்" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 8 ஆம் பிரிவைத் திருத்துதல்*

**7.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 9 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 9 ஆம் பிரிவைத் திருத்துதல்*

(1) அதன் (1) ஆம் உட்பிரிவில், "இயக்குநர் ஒருவரினால்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "இயக்குநரொருவரினால் அல்லது வழங்குநரொருவரினால்" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்; அத்துடன்

(2) அதன் (2) ஆம் உட்பிரிவில், "அத்தகைய இயக்குநரை" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "அத்தகைய இயக்குநரை அல்லது வழங்குநரை" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்.

முதன்மைச் சட்டவாக்கத்தில் 9அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்

**8.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 9 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுவதுடன் இது அச்சட்டவாக்கத்தின் 9அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும்:-

"போட்டிக் கெதிரான செயல்முறைகள் முதலியன பற்றிய பிணக்குகளைத் தீர்த்தல்

9அ. (1) ஆணைக்குழுவானது, அதனது சொந்தப் பிரேரணையின் மீது அல்லது பின்வருவன தொடர்பில் எவரேனுமாளினால் அவ்வாணைக் குழுவுக்குச் செய்யப்பட்ட முறைப்பாடொன்றின் அல்லது கோரிக்கையொன்றின்மீது அது அவசியமெனக் கருதுகின்ற முறையிலான புலனாய்வொன்றைச் செய்து இயக்குநருக்கு அல்லது வழங்குநருக்கு கட்டளையொன்றை வழங்குதல் வேண்டும் –

(அ) ஏதேனும் போட்டிக்கெதிரான செயல் முறையின் உள்ளமை அல்லது உள்ளமை பற்றிய பொருளமைத்துக் கொள்ளுகை;

(ஆ) எந்தவொரு சந்தையில் அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட சந்தைகளில் இயக்குநரொருவர் அல்லது வழங்குநரொருவர் தொலைத்தொடர்புச் சேவையொன்றை வழங்குகின்றாரோ அந்தவொரு சந்தையிலுள்ள அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட சந்தைகளிலுள்ள நிலைமைகளைப் பாதிக்கக்கூடிய ஆதிக்க நிலையொன்றின் (கணிசமான சந்தை வலு) துர்ப்

பிரயோகத்தின் கொள்ளல், உள்ளமை அல்லது உள்ளமைபற்றிய பொருள மைத்துக் கொள்ளுகை;

(இ) இணைவுநிலையொன்றின் உருவாக்கம் அல்லது உருவாக்கம்பற்றிய பொருள மைத்துக்கொள்ளுகை; அல்லது

(ஈ) நியாயமான, செலவு அடிப்படையிலான மற்றும் பாரபட்சமற்ற நியதிநிபந்தனை களில் சந்தை வலையமைப்பை அணுகு வதற்கான உரிமையைக் கொண்டி ராதிருத்தல்.

(2) ஆணைக்குழுவானது (1) ஆம் உட்பிரிவின்கீழ் தொடங்கப்பட்ட புலனாய்வொன்றுக்கு அமைந்த வராகவுள்ள எவரேனும் இயக்குநருக்கு அல்லது வழங்குநருக்கு கேட்கப்படுவதற்கான மற்றும் ஏதேனும் ஆவணச் சான்றைக் காண்பிப்பதற்கான வாய்ப்பொன்றை வழங்கலாம்.

(3) புலனாய்வின்மேல் ஆணைக்குழுவானது, பந்திகள் (அ), (ஆ), (இ) அல்லது (ஈ) என்பவற்றில் குறித்துரைக்கப்பட்ட நிலைமைகளுள் ஏதேனு மொன்று உள்ளதென்றும், ஆனால் அத்தகைய நிலைமை பொதுமக்களின் நலனுக்கெதிராகத் தொழிற்படுவதில்லை அல்லது தொழிற்படும் சாத்தியங்கொண்டிருப்பதில்லையென்றும் திருப்திப்படுமிடத்து, ஆணைக்குழுவானது, அதற்கென ஆக்கப்படும் கட்டளைமூலம், எந்தச் சந்தையில் பந்திகள் (அ), (ஆ), (இ) அல்லது (ஈ) என்பவற்றில் குறித்துரைக்கப்பட்ட நிலைமைகளுள் ஏதேனுமொன்று உள்ளதோ அந்தச் சந்தையில், ஏனைய இயக்குநர்கள் மற்றும் வழங்குநர்கள்மீது விளைகின்ற பாதகமான விளைவுகள் எவையேனு மிருப்பின், அவற்றைப் பரிகரிக்கும் அல்லது தடுக்கும்

நோக்கத்துக்கு அவசியமானவையென அல்லது உசிதமானவையென அது கருதக்கூடியவாறான அத்தகைய நியதிநிபந்தனைகளுக்கமைய, அதற்கென ஆக்கப்படும் கட்டளைமூலம் அத்தகைய நிலைமை உள்ளமையை அதிகாரமளித்தல் வேண்டும்.

(4) புலனாய்வின்மேல் ஆணைக்குழுவானது, பந்திகள் (அ), (ஆ), (இ) அல்லது (ஈ) என்பவற்றில் குறித்துரைக்கப்பட்ட நிலைமைகளுள் ஏதேனுமொன்று உள்ளதென்றும் அத்தகைய நிலைமை பொதுமக்களின் நலனுக்கெதிராகத் தொழிற்படுகின்றது அல்லது தொழிற்படும் சாத்தியங்கொண்டதென்றும் காணுமிடத்து, ஆணைக்குழுவானது, அதன் விளைகின்ற பாதகமான விளைவுகளைப் பரிகரிக்கும் அல்லது தடுக்கும் நோக்கத்துக்காக அத்தகைய ஏதேனும் நிலைமை உள்ளமையைத் தணித்து தோதான கட்டளையொன்றை ஆக்குதல் வேண்டும்.

(5) புலனாய்வின்மேல் ஆணைக்குழுவானது, பந்திகள் (அ), (ஆ), (இ) அல்லது (ஈ) என்பவற்றில் குறித்துரைக்கப்பட்ட நிலைமைகளுள் ஏதேனுமொன்று உள்ளதென்று காணுமிடத்து, ஆணைக்குழுவானது, அவசியமானவிடத்து, (2) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளைக் கருத்திற்கொண்டு உட்பிரிவுகள் (3) மற்றும் (4) இல் குறிப்பீடுசெய்யப்பட்ட கட்டளைகள் தவிர்ந்த தோதான கட்டளையொன்றை வழங்கலாம்.

(6) பின்வருவன தொடர்பில் விதிகள் ஆக்கப்படலாம்:-

(அ) நியாயமான போட்டியை ஊக்குவிக்கும், சந்தைச் சீர்குலைவுகளைத் தடுக்கும் மற்றும் நுகர்வோர் நலன்களைப் பாதுகாக்கும் நோக்குடன், ஆணைக்குழு

வினால் வரைவிலக்கணங்கூறப்படக் கூடியவாறு கணிசமான சந்தை வலுவைக் கொண்டுள்ள இயக்குநர்கள் மற்றும் வழங்குநர்கள்மீது குறிப்பான கடப்பாடு களை விதித்தல்; அத்துடன்

(ஆ) பாரபட்சமற்ற அணுகலை வசதிப்படுத்தல் மற்றும் எல்லா இயக்குநர்கள் மற்றும் வழங்குநர்களுக்குச் சமவாய்ப்புக்களை உறுதிப்படுத்தல்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 10 ஆம் பிரிவைத் திருத்துதல்

**9.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 10 ஆம் பிரிவு, அதன் (1) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவை உட்புகுத்துவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:-

"(1அ) ஆணைக்குழு பின்வருவனவற்றுக்கான தத்துவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்-

(அ) வானொலி அதிர்வெண் அலைக்கற்றையின் ஏதேனும் பாகத்தை அது தோதானதெனக் கருதுகின்ற கற்றைகளின் எண்ணிக்கையாகப் பிரித்தொதுக்குதலும் ஒவ்வோர் அலைவரிசையும் எந்த சேவைக்காக அல்லது நோக்கத்துக்காகப் பயன்படுத்தப்படலாமோ அந்த சேவையை அல்லது நோக்கத்தைக் குறித்துரைத்தலும்;

(ஆ) அதிர்வெண் அலைவரிசைத் திட்டங்களைக் குறித்துரைத்தல்; அத்துடன்

(இ) வானொலி அதிர்வெண்ணை அல்லது வானொலி அதிர்வெண்ணின் ஏதேனும் கற்றையை 22 ஆம் பிரிவில் ஏற்பாடு செய்யப்பட்ட முறையில் வானொலித் தொடர்பாடல் உபகரணப் பயனர்களுக்குக் குறித்துரைத்தல்.

(1ஆ) ஆணைக்குழுவானது, 22 ஆம் பிரிவின்கீழ் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் நோக்கத்துக்காக உரிமமொன்றைப் பெற்றுக்கொள்வதற்கு உட்கருதுகின்ற எவரேனுமாளுக்கு, இல்லாதாக்கப்படுவதற்கான உரிமைகள் மற்றும் அதுசார்பில் ஆக்கப்பட்ட விதிகள்மூலம் அவ் ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய வேறு நியதிநிபந்தனைகள் என்பவற்றுக்கமைய கட்டணமொன்றைச் செலுத்துவதன்மேல் அவ் ஆணைக் குழுவினால் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியொன்றுக்கு அதிர்வெண் ஒதுக்கீட்டு அனுமதிப்பத்திரம் ஒன்றை வழங்கலாம்.”.

*முதன்மைச் சட்டவாக்கத்தில் 10அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்*

**10.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 10 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுவதுடன் இது அச்சட்டவாக்கத்தின் 10அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும்:-

“இலக்கங்கள் முதலியவற்றின் குறித்தொதுக்கல் மற்றும் பயன்பாடு தொடர்பில் ஆணைக்குழு தனியதிகாரியாக இருத்தல்

10அ. (1) ஆணைக்குழுவானது இலக்கங்கள், பெயர்கள், குறியீடுகள் மற்றும் அடையாளங் காட்டிகள் தொடர்பான அல்லது அவற்றுடன் சம்பந்தப்பட்ட தத்துவங்கள் உரித்தாக்கப்பட்ட தனியதிகாரியாக இருத்தல் வேண்டும்.

(2) ஆணைக்குழு (1) ஆம் உட்பிரிவின்கீழ் இலக்கங்கள், பெயர்கள், குறியீடுகள் மற்றும் அடையாளங்காட்டிகளின் வினைத்திறனான குறித்தொதுக்கலை ஊக்குவிப்பதற்குப் பொறுப் பாதல் வேண்டும்.

(3) ஆணைக்குழு, பின்வரும் தத்துவங்களுட்பட இலக்கங்கள், பெயர்கள், குறியீடுகள் மற்றும் அடையாளங்காட்டிகளின் பயன்பாட்டுக்கான திட்டங்களைத் தயாரித்தல், குறித்துரைத்தல், வெளியிடுதல் மற்றும் நிருவகித்தல் என்பவற்றுக்கான தத்துவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்-

(அ) அந்தந்தத் திட்டங்களுக்கிணங்க இலக்கங்கள், இலக்கங்களின் தொகுதி அல்லது தொகுதிகள், குறியீடுகள் மற்றும் பெயர்கள் என்பவற்றைக் குறித்தளித்தல்;

(ஆ) இலக்கமொன்றை, இலக்கங்களின் தொகுதியொன்றை அல்லது தொகுதிகளை அல்லது குறியீடுகளைப் பயன்படுத்துவதற்கான உரிமையை குத்தகைக்கு விடுவதற்கான அல்லது விற்பனை செய்வதற்கான அங்கீகாரத்தை வழங்குதல்;

(இ) அவ்வாறு தயாரிக்கப்பட்ட இலக்கமிடலுக்கான திட்டங்களை, பெயர்களை, குறியீடுகளை மற்றும் அடையாளங்காட்டிகளைத் திருத்துதல்;

(ஈ) (i) அவ்வாறு குறித்தளிக்கப்பட்ட இலக்கங்களை, இலக்கங்களின் தொகுதியொன்றை அல்லது தொகுதிகளை, குறியீடுகளை மற்றும் பெயர்களைப் பயன்படுத்துவதற்கான விதிப்பனவுகளை குறித்துரைப்பதற்கான;

(ii) அந்தந்தத் திட்டங்களில் இலக்கங்களை, பெயர்களை, குறியீடுகளை மற்றும் அடையாளங்காட்டிகளை முகாமைசெய்தல் தொடர்பான; அத்துடன்

(iii) இப்பிரிவின்கீழ் குறித்தளிக்கப்பட்ட இலக்கங்களை, இலக்கங்களின் தொகுதியை அல்லது தொகுதிகளை, குறியீடுகளை மற்றும் பெயர்களை மீளப்பெறுதல் தொடர்பான நிபந்தனைகளைத் தீர்மானிப்பதற்கான,

விதிகளை ஆக்குதல்; அத்துடன்

(உ) பின்வருவனவற்றுக்காக எவரேனு மாளுக்குப் பணிப்புக்களை வழங்குதல்–

(i) இப்பிரிவின்கீழ் குறித்தொதுக் கப்பட்ட இலக்கங்களின், பெயர் களின், குறியீடுகளின் மற்றும் அடையாளங்காட்டிகளின் பயன் படுத்துகை பற்றிய தகவல்களைச் சமர்ப்பிக்கும்படி; அத்துடன்

(ii) இலக்கங்களின், பெயர்களின், குறியீடுகளின் மற்றும் அடை யாளங்காட்டிகளின் பயன்பாட்டுக் கான சம்பந்தப்பட்ட திட்டத்துக்கு இசைந்தொழுகும்படி.

(4) ஆணைக்குழு இலக்கப் பெயர்வுறுநிலையை நடைமுறைப்படுத்துவதற்கும் மற்றும் அத்தகைய நடைமுறைப்படுத்துகைக்காக இயக்குநர்களுக்கு விதிகள், வழிகாட்டுநெறிகள் மற்றும் பணிப்புக்களை வழங்குவதற்குமான தத்துவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(5) இப்பிரிவின்கீழ் எவ்வாளுக்கு இலக்கங்கள், குறியீடுகள், இலக்கங்களின், தொகுதியொன்று அல்லது தொகுதிகள், இலக்கங்களின் குறியீடு அல்லது குறியீடுகள் குறித்தொதுக்கப்பட் டுள்ளனவோ அவ்வாளுக்கு முறையீடுகளைச் செய்வதற்கான வாய்ப்பொன்றை வழங்கியபின்னர், அவருக்கு எழுத்திலான முன்னறிவித்தல் ஒன்றைக் கொடுப்பதன்மூலம் அத்தகைய ஆளின் சம்மதத் துடன் அத்தகைய குறித்தொதுக்குகையை ஆணைக் குழு மீளப்பெறலாம்.".

**11.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 11 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

முதன்மைச் சட்டவாக்கத்தின் 11 ஆம் பிரிவைத் திருத்துதல்

(1) அதன் (1) ஆம் உட்பிரிவில், ''தொலைத்தொடர்புத் தொகுதியொன்றை இயக்குவதற்கு 17 ஆம் பிரிவின் கீழான உரிமமொன்றின்மூலம் அதிகாரமளிக்கப்பட்டவரான'' என்னும் சொற்களுக்கும் எண்ணுக்கும் பதிலாக, ''பதினேழாம் பிரிவின்கீழ் அல்லது 17ஆ என்னும் பிரிவின்கீழ் உரிமமொன்று வழங்கப்பட்டவரான'' என்னும் சொற்களையும் எண்ணையும் இடுவதன்மூலமும்;

(2) அதன் (4) ஆம் மற்றும் (5) ஆம் உட்பந்திகளில், ''இயக்குநருக்கு'' என்னும் சொல்லுக்குப் பதிலாக, ''இயக்குநருக்கும் மற்றும் வழங்குநருக்கும்'' என்னும் சொற்களை இடுவதன்மூலமும்; அத்துடன்

(3) அதன் (5) ஆம் உட்பிரிவை உடனடுத்து பின்வரும் புதிய உட்பிரிவுகளைச் சேர்ப்பதன்மூலமும்:-

''(6) பதினேழாம் பிரிவின்கீழ் அல்லது 17ஆ என்னும் பிரிவின்கீழ் உரிமமொன்று வழங்கப்பட்ட ஆளொருவர் (2) ஆம் உட்பிரிவின்கீழ் வழங்கப்பட்ட கட்டளையொன்றுக்கு இணங்கியொழுகத் தவறுகின்றவிடத்து ஆணைக்குழு அத்தகைய உரிமத்தினால் அதிகாரமளிக்கப்பட்ட செயற்பாட்டிலிருந்து ஒன்று திரட்டப்பட்டதும், சம்பந்தப்பட்ட ஆண்டுக்கு நேர்முற்போந்த ஆண்டின் வருடாந்த மொத்த விற்பனை வரவின் ஒரு சதவீதத்தை விஞ்சாத தொகையொன்றாகவுள்ளதுமான தண்டமொன்றைச் செலுத்துமாறு அத்தகைய ஆளை அறிவித்தல்மூலம் தேவைப்படுத்தலாம்.

(7) ஆணைக்குழு, இப்பிரிவின்கீழ் விதிக்கப்பட்ட தண்டமொன்றைச் சேகரிப்பதற்குப் பொறுப்பாதல் வேண்டுமென்பதுடன் அவ்வாறு சேகரிக்கப்பட்ட பணம்

22ஊ என்னும் பிரிவின்கீழ் தாபிக்கப்பட்ட ஆணைக் குழுவின் நிதியத்துக்கு வரவுவைக்கப்படுதலும் வேண்டும்.

(8) ஆறாம் உட்பிரிவின் நியதிகளின்படி தண்ட மொன்றுக்கு ஆளாகவந்துள்ள எவரேனுமாள் அத்தகைய அறிவித்தலில் குறித்துரைக்கப்படக் கூடியவாறான அத்தகைய காலப்பகுதியினுள் அத்தகைய தண்டத்தைச் செலுத்துவதற்குத் தவறினால், ஆணைக்குழுவானது தகுதிவாய்ந்த நியாயாதிக்கத்தைக் கொண்ட நீதிவான் நீதிமன்றம் அதன் சாதாரண நியாயாதிக்கத்தைப் பிரயோகிக்கையில் விதிக்கக்கூடிய குற்றப்பணத் தொகையை தண்டக் கொடுப்பனவு விஞ்சலாமென்பது எவ்வாறிருப்பினும், அத்தகைய நீதிமன்றத்தினால் விதிக்கப்பட்ட குற்றப்பணமொன்று என்றாற்போன்று அதேமுறையில் அத்தகைய பணத்தொகையைக் கொடுப்பனவு செய்வதைத் தேவைப்படுத்துகின்ற கட்டளையொன்றுக்காக அந்நீதிமன்றத்துக்கு மறுதிறத்தவரில்லா விண்ணப்பமொன்றைச் செய்யலாம்.

(9) ஆட்களின் குழுவொன்றின்மீது இப்பிரிவின் கீழான தண்டமொன்று விதிக்கப்படுகின்றவிடத்து, அப்போது-

(அ) அந்த ஆட்களின் குழுவானது கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாகவிருப்பின், (6) ஆம் உட்பிரிவின்கீழான இணங்கியொழுகாமையின்போது அதன் பணிப்பாளரொருவராக இருந்த ஒவ்வோராளும் மற்றும் அக்கூட்டிணைக்கப்பட்ட குழுவின் முகாமைக்கும் கட்டுப்பாட்டுக்கும் பொறுப்பாகவிருந்த வேறு எவரேனும் அலுவலரும்;

(ஆ) அந்த ஆட்களின் குழுவானது குழுமமொன்றாக விருப்பின், அக்குழுமத்தின் ஒவ்வொரு பங்காளரும்; அல்லது

(இ) அந்த ஆட்களின் குழுவானது கூட்டிணைக்கப்படாத குழுவொன்றாகவிருப்பின், (6) ஆம் உட்பிரிவின்கீழ் தேவைப்படுத்தப்படுகின்ற இணங்கியொழுகாமையின்போது அக்குழுவின் முகாமைக்கும் கட்டுப்பாட்டுக்கும் பொறுப்பாகவிருந்த அலுவலரும்,

அவர் (6) ஆம் உட்பிரிவின்கீழான தேவைப்பாட்டுக்கு இணங்கியொழுகத் தவறியமை பற்றிய அறிவைக் கொண்டிருக்கவில்லையென்று அல்லது அதனுடன் இணங்கியொழுகுவதற்கான உரிய கவனம் மற்றும் விழிப்புக்கவனம் எல்லாவற்றையும் பிரயோகித்திருந்தாரென்று எண்பித்தாலொழிய, அத்தகைய தண்டத்தைச் செலுத்துவதற்குப் பொறுப்பாதல் வேண்டும்.

(10) இப்பிரிவின்கீழான தண்டமொன்றின் விதிப்பினால் இன்னலுற்ற ஆளொருவர் அரசியலமைப்பின் 154ஞ என்னும் உறுப்புரையினால் தாபிக்கப்பட்ட மேல் நீதிமன்றத்துக்கு அத்தகைய கட்டளைக்கெதிராக மேன்முறையீடு செய்யலாம்.

(11) பத்தாம் உட்பிரிவின்கீழ் மேன்முறையீடொன்றைச் செய்வதற்கு விரும்புகின்ற எவரேனுமாள் (6) ஆம் உட்பிரிவின்கீழ் விதிக்கப்பட்ட தண்டமொன்றுக்குச் சமமான அத்தகைய பணத்தொகை ஒன்றை மேல் நீதிமன்றத்தின் பதிவாளர் முன்னிலையில் ஒரு பிணைப்பொறுப்பு என்றவகையில் காசாக வைப்புச் செய்தல் வேண்டும்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 17 ஆம் பிரிவைத் திருத்துதல்*

**12.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 17 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அதன் (6) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில் ''உரிமத்தில் அடங்கியுள்ள அதற்கான ஏதேனும் நியதிகளுக்கிணங்க'' என்னும் சொற்களுக்குப் பதிலாக,

"17அ என்னும் பிரிவின் ஏற்பாடுகளின் நியதிகளின் படி" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன்மூலமும்; அத்துடன்

(2) அதன் (9) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவைச் சேர்ப்பதன்மூலமும்:-

"(10) ஆணைக்குழு, எந்த இயக்குநருக்கு இப்பிரிவின்கீழ் உரிமமொன்று வழங்கப்பட்டுள்ளதோ அந்த எவரேனும் இயக்குநர் இச்சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட விதிகளினால் குறித்துரைக்கப்பட்ட அத்தகைய நியதிநிபந்தனைகளுக்கமைய ஏதேனும் வானொலி அணுகல் வலையமைப்பு உட்பட அவரினால் சொந்தமாக வைத்திருக்கப்படும் அல்லது பயன்படுத்தப்படும் ஏதேனும் வசதியின் பயன்பாட்டை ஆணைக்குழுவினால் குறித்துரைக்கப்பட்ட வேறு இயக்குநருடன் பகிர்ந்துகொள்ளும்படி பணிப்புக்களை வழங்குவதற்கான தத்துவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தில் 17அ மற்றும் 17ஆ என்னும் புதிய பிரிவுகளை உட்புகுத்துதல்

**13.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 17 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவுகள் இத்தால் உட்புகுத்தப்படுவதுடன் இவை அச்சட்டவாக்கத்தின் 17அ மற்றும் 17ஆ என்னும் பிரிவுகளாகப் பயனுறுதலும் வேண்டும்:-

"17 ஆம் பிரிவின்கீழ் வழங்கப்பட்ட உரிமமொன்றை இல்லா தொழித்தல்

17அ. (1) பதினேழாம் பிரிவின்கீழ் வழங்கப்பட்ட உரிமமொன்று, அவ்வுரிமத்தின் நியதிநிபந்தனைகள் மீறப்படுவதன்மீது அல்லது இச்சட்டத்தின் ஏற்பாடுகளின் அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதியின் அல்லது விதியின் ஏதேனும் மீறுகையின்மீது அதற்கான காரணங்களைக் குறித்தளித்து அமைச்சரினால் இல்லாதொழிக்கப்படலாம்.

(2) அமைச்சர், (கட்டளையின் வெளியீட்டுத் தேதியிலிருந்து முப்பது நாட்களுக்கு முன்னரான

தேதியொன்றாகவிராத) அத்தகைய இல்லா தொழித்தல் தேதியொன்றை வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளைமூலம் குறித்துரைத்தல் வேண்டும் என்பதுடன் இல்லாதொழித்தலுக்கான காரணங்கள் இல்லாதொழித்தல் தேதிக்கு பதினைந்து நாட்களுக்கு முன்னர் ஆணைக்குழுவுக்கூடாக இயைபான இயக்குநருக்கு அறிவிக்கப்படுதலும் வேண்டும்.

(3) இரண்டாம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட கட்டளையானது இப்பிரிவின்கீழ் இல்லாதொழிக்கப்பட்டுள்ள உரிமத்தின் இயக்குநருக்கு எந்த உரிமம் வழங்கப்பட்டதோ அந்த உரிமம் தொடர்பில் தொலைத்தொடர்பு முறைமையை இயக்குவதற்காக ஆக்கப்பட்ட இடைக்கால ஒழுங்கேற்பாட்டையும் குறித்துரைத்தல் வேண்டும்.

(4) அமைச்சர் 17 ஆம் பிரிவின்கீழ் ஓர் உரிமத்தை இல்லாதொழிக்குமிடத்து, உரிமம்பெற்றவர், அமைச்சரின் முடிபு அவருக்கு அறிவிக்கப்பட்ட தேதியிலிருந்து முப்பது நாட் காலப்பகுதியினுள், அத்தகைய இல்லாதொழிப்புக்கெதிராக மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு மேன்முறையீடு செய்யலாம்; அது, அமைச்சரின் முடிபை உறுதிப்படுத்தலாம் அல்லது புறத்தொதுக்கலாம்.

ஓர் உரிமமின்றி குறித்த சில செயல்களில் ஈடுபடுவதற்கான தடை

17ஆ. (1) ஆளொருவர் ஆணைக்குழுவினால் அதற்கென வழங்கப்பட்ட உரிமமொன்றின் அதிகாரத்தின்கீழ் தவிர பின்வரும் செயற்பாடுகளில் ஈடுபடுதலாகாது:-

(அ) தொலைத்தொடர்பு முறைமையொன்றை இயக்குவதற்காகத் தேவைப்பட்ட, விதிகளினால் குறித்துரைக்கப்பட்ட உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குதல்;

(ஆ) விதிகளினால் குறித்துரைக்கப்பட்ட தொலைத்தொடர்புச் சேவைகளை வழங்குதல்; அல்லது

(இ) கம்பி வட இடுகை நிலைய வசதிகளை வழங்குதல்.

(2) ஓராம் உட்பிரிவின் (இ) என்னும் பந்தியின் நோக்கத்துக்காக, வசதிகளானவை, இலங்கை ஆள்புல நீர்ப்பரப்பினுள் இடப்பட்ட கடலடிக் கம்பிவடத்தை உள்ளடக்குதல் வேண்டும்.

(3) கடலடிக் கம்பிவடங்களுக்கான அணுகுகை உட்பட கம்பி வட இடுகை நிலைய வசதிகளுக்கான விதிப்பனவுகள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக் கப்படுதல் அல்லது தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

(4) ஓராம் உட்பிரிவின்கீழ் வழங்கப்பட்ட ஓர் உரிமம்–

(அ) ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படக் கூடியவாறான அத்தகைய படிவத்திலும் அத்தகைய கட்டணத்தை கொடுப்பனவு செய்வதன்மீதும் இருத்தல் வேண்டும்;

(ஆ) அத்தகைய உரிமத்தில் குறித்துரைக்கப் படக்கூடியவாறான அத்தகைய நியதி நிபந்தனைகளுக்கு அமைந்ததாதல் வேண்டும்; அத்துடன்

(இ) இச்சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட விதி களினால் காலத்துக்குக்காலம் ஆணைக் குழுவினால் தீர்மானிக்கப்படக்கூடிய வாறான அத்தகைய தொழில்நுட்ப நியமங்களுக்கு இசைந்தொழுகுவதற்கு தேவைப்படுத்தப்படுதல் வேண்டும்.

(5) ஓராம் உட்பிரிவின்கீழ் உரிமமொன்றைப் பெறாமல் (1) ஆம் உட்பிரிவின் (அ), (ஆ) அல்லது (இ) என்னும் பந்திகளில் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் செயற்பாட்டில் ஈடுபடுகின்ற எவரேனும் ஆள் இச்சட்டத்தின்கீழ் தவறொன்றைப் புரிகின்றார்.

(6) ஆணைக்குழு, உரிமமொன்றின் எவையேனும் நியதிநிபந்தனைகளின் மீறுகையின்மீது அல்லது உரிமம்பெற்றவர் இசைந்தொழுகுவதற்கு தேவைப்படுத்தப்பட்ட தொழில்நுட்ப நியமங்களுடன் இணங்கியொழுகுவதற்கு அவரினாலான தவறுகையின்மீது இப்பிரிவின்கீழ் அளிக்கப்பட்ட அவ்வுரிமத்தை எந்நேரத்திலும் இல்லாதொழிக் கலாம்.

(7) ஆணைக்குழு, (1) ஆம் உட்பிரிவின்கீழ் உரிமமொன்றுக்கான விண்ணப்பமொன்றை மறுக் கின்றவிடத்து அல்லது (3) ஆம் உட்பிரிவின்கீழான உரிமமொன்றை இல்லாதொழிக்கின்றவிடத்து, விடயத்துக்கேற்ப, விண்ணப்பதாரர் அல்லது உரிமம்பெற்றவர், ஆணைக்குழுவின் முடிபை அவருக்கு அறிவித்த தேதியிலிருந்து முப்பது நாட் காலப்பகுதியொன்றினுள், விடயத்துக்கேற்ப அத்தகைய மறுப்பு அல்லது இல்லாதொழித்தலுக்கு எதிராக மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு மேன்முறையீடு செய்யலாம்; அது, ஆணைக்குழு வின் முடிபை உறுதிப்படுத்தலாம் அல்லது புறத்தொதுக்கலாம்.

(8) பின்வருவனவற்றைக் குறித்துரைப்பதற்கு இச்சட்டத்தின்கீழ் விதிகள் ஆக்கப்படுதல் வேண்டும்-

(அ) ஓராம் உட்பிரிவின்கீழான உரிமமொன் றுக்கான விண்ணப்பமொன்றைச் செய்யும் முறை;

(ஆ) ஓராம் உட்பிரிவின்கீழான உரிமத்தின் ஒவ்வொரு வகுதிக்குமான விண்ணப்ப மொன்றைச் செய்வதற்கு விண்ணப்ப தாரர் ஒருவரினால் நிறைவேற்றப்பட வேண்டிய தேவைப்பாடுகள்;

(இ) உரிமமொன்றின் செல்லுபடியாகும் காலப்பகுதி மற்றும் அதனை புதுப்பிக்கும் முறை; அத்துடன்

(ஈ) உரிமமொன்றை இடைநிறுத்துவதற்கான அல்லது இல்லாதாக்குவதற்கான ஏதுக்கள்.".

**14.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 18 ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:- *முதன்மைச் சட்டவாக்கத்தின் 18 ஆம் பிரிவைத் திருத்துதல்*

(1) "உரிமத்தின் ஏதேனும் நிபந்தனை" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "உரிமத்தின்" என்னும் சொல்லை, அப்பிரிவில் எங்கெல்லாம் அச்சொற்கள் காணப்படுகின்றதோ அங்கெல்லாம் இடுவதன்மூலமும்;

(2) அதன் (3) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவைச் சேர்ப்பதன்மூலமும்:-

"(4) அத்தகைய திரிபுபடுத்துகை இச்சட்டத்தின் ஏற்பாடுகளை அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதியை அல்லது விதியை வினைத்திறனாக நடைமுறைப்படுத்துவதற்கு அவசியமென கருதப்படின் 17ஆ என்னும் பிரிவின்கீழ் வழங்கப்பட்ட ஏதேனும் உரிமத்தை ஆணைக்குழு திரிபுபடுத்தலாம்."; அத்துடன்

(3) அதன் ஓரக்குறிப்பில், "17 ஆம் பிரிவின்கீழ்" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, "17 ஆம் மற்றும் 17ஆ என்னும் பிரிவுகளின்கீழ்" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன்மூலமும்.

**15.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 18அ என்னும் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:- *முதன்மைச் சட்டவாக்கத்தின் 18அ என்னும் பிரிவைத் திருத்துதல்*

(1) அதன் (1) ஆம் உட்பிரிவில், ''ஆணைக்குழுவின் அங்கீகாரத்தை முன்னரே பெற்றுக்கொள்ளாமல்'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, ''17ஆ என்னும் பிரிவின்கீழ் ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட ஒரு வழங்குநர் உரிமத்துடன் தவிர'' என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன்மூலமும்;

(2) அதன் (2) ஆம் மற்றும் 3 ஆம் உட்பிரிவுகளை நீக்கிவிட்டு அவற்றுக்குப் பதிலாக பின்வரும் உட்பிரிவை இடுவதன்மூலமும்:-

''(2) வழங்குநர் ஒருவர் தொலைத்தொடர்பு முறைமையைப் பயன்படுத்துவதற்கு இயக்குநரைக் கோருகின்றவிடத்து, அவ்வியக்குநர் இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைய மொத்த விற்பனைச் சேவைகள் உட்பட அத்தகைய தொலைத்தொடர்பு முறைமையை அத்தகைய வழங்குநர் பயன்படுத்துவதற்கு அனுமதியளித்தல் வேண்டும்.''; அத்துடன்

(3) அதன் (4) ஆம் உட்பிரிவில், ''பத்தாயிரம் ரூபாவுக்குக்'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, ''ஒரு இலட்சம் ரூபாவுக்குக்'' என்னும் சொற்களை இடுவதன்மூலமும்.

முதன்மைச் சட்டவாக்கத்தில் 20அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்

**16.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 20 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுகின்றதுடன் இது அச்சட்டவாக்கத்தின் 20அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும்:-

''தொலைத் தொடர்பு முறைமைகளை இடைத் தொடுத்தல்

20அ. (1) வினைத்திறனான தொலைத்தொடர்புச் சேவையை வழங்குவதற்கு அல்லது பொதுமக்களின் நலன் கருதி இடைத்தொடுப்பு அவசியமென ஆணைக்குழு கருதுகின்ற சூழ்நிலைகளில், இயக்குநர் ஒருவரை இன்னொரு இயக்குநருடன் அவர்களின் தொலைத்தொடர்பு முறைமைகளுக்கிடையிலான இடைத்தொடுப்புக்காக உடன்படிக்கையொன்றை செய்துகொள்ளுமாறு ஆணைக்குழு தேவைப்படுத்தலாம்.

(2) ஒவ்வொருவரினதும் தொலைத்தொடர்பு முறைமைகள், தொலைத்தொடர்புச் சேவைகள் மற்றும் தொலைத்தொடர்பு உபகரணத்துக்கான அணுக்கத்தை வழங்குவது, தமது தொலைத்தொடர்பு முறைமைகளுக்கிடையிலான இடைத் தொடுப்புக்கான உடன்படிக்கையொன்றைச் செய்துகொள்வதற்கு (1) ஆம் உட்பிரிவின்கீழ் ஆணைக்குழுவினால் தேவைப்படுத்தப்பட்ட இயக்குநர்களின் கடமையாதல் வேண்டும்.

(3) இடைத்தொடுப்பு உடன்படிக்கையொன்றில் உள்ளடக்கப்படவேண்டிய நியதிநிபந்தனைகள், அத்தகைய இடைத்தொடுப்பு உடன்படிக்கைக்கான இயக்குநர்களுக்கு வழங்கப்பட்ட முறையான உரிமங்களின் நியதிநிபந்தனைகளுக்கிணங்க பேச்சுவார்த்தைமூலம் செய்யப்படுதல் வேண்டும் என்பதுடன் பின்வருவனவற்றை மேலும் ஏற்பாடு செய்தலும் வேண்டும்:-

(அ) இடைத்தொடுப்பு உடன்படிக்கையின் நிபந்தனைகள், இடைத்தொடுப்பு உடன்படிக்கைக்கு திறத்தவர் ஒருவராகவுள்ள ஒவ்வோர் இயக்குநருக்கும் வழங்கப்பட்ட முறையான உரிமங்களின் நிபந்தனைகளுடன் இசைந்தொழுகுதல் வேண்டும்;

(ஆ) ஓர் இயக்குநரின் தொலைத்தொடர்பு முறைமையுடன் தொடுக்கப்பட்ட பாவனையாளர்கள் இடைத்தொடுப்பு உடன்படிக்கைக்கு திறத்தவர் ஒருவராகவுள்ள ஏனைய இயக்குநரின் தொலைத்தொடர்பு முறைமைக்கான அணுக்கத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்;

(இ) இடைத்தொடுப்பு உடன்படிக்கைக்குத் திறத்தவர்களாகவுள்ள இயக்குநர்கள் தமது முறையான தொலைத்தொடர்பு

முறைமைகளில் ஒரே மட்ட தரத்தைப் பேணுதல் வேண்டும்;

(ஈ) இடைத்தொடுப்பு ஒழுங்கேற்பாடு வினைத்திறனாகவும் நியாயமானதாகவும் இருத்தல் வேண்டும் என்பதுடன் இடைத் தொடுப்பு உடன்படிக்கையொன்றுக்கான திறத்தவர்கள், ஆற்றல், இடைமுகங் கள் மற்றும் தொழில்நுட்ப நியமங்கள் தொடர்பாக ஓரங்காட்டாத அடிப்படை யில் சேவைகள் வழங்கப்படுகின்றன என உறுதிப்படுத்துதலும் வேண்டும்;

(உ) இடைத்தொடுக்கப்பட்ட சேவைகள் எந்த நியதிநிபந்தனைகளுக்கமைய வழங்கப் படுகின்றனவோ அந்த நியதிநிபந்த னைகள் சர்வதேச ரீதியில் ஏற்றுக் கொள்ளப்பட்ட மிகச்சிறந்த, செயல் முறைகளைப் பிரதிபலித்தல் வேண்டும்;

(ஊ) இடைத்தொடுப்புச் சேவைகள் பயனுள்ள மற்றும் நிலைபெறுதகு போட்டியை உறுதிப்படுத்துதல் வேண்டும்; அத்துடன்

(எ) சேவைகளுக்கான இடைத்தொடுப்பு வீதங்கள் ஆகுசெலவு சார்ந்ததாக விருத்தல் வேண்டும் என்பதுடன் ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்பட்ட முறைமையியலுக்கு அமைந்தனவாதலும் வேண்டும்.

(4) ஆணைக்குழு, அவசியமேற்படின் இடைத் தொடுப்பு உடன்படிக்கையொன்றில் உள்ளடக்கப் படவேண்டிய நியதிநிபந்தனைகளை விதிக்கலாம்.

(5) இப்பிரிவின் கீழான இடைத்தொடுப்பு உடன்படிக்கையொன்றுக்கான திறத்தவர்கள், இச் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட முறையான

உரிமங்களை மீறி போட்டிக்கு எதிரான செயல் முறையொன்றை நாடியிருக்கின்றார்கள் என ஆணைக்குழு திருப்திப்படின் அல்லது அப்பயன்பட மூன்றாந் திறத்தவரொருவரிடமிருந்து முறைப் பாடொன்றைப் பெறின், ஆணைக்குழு, இடைத் தொடுப்பு உடன்படிக்கைக்கான திறத்தவர்களுக்கு நியாயமான அறிவித்தலை வழங்கியதன்பின்னர் அதுபற்றிய புலனாய்வொன்றைத் தொடங்குதல் வேண்டும்.

(6) ஆணைக்குழு, (5) ஆம் உட்பிரிவின்கீழ் தொடங்கப்பட்ட புலனாய்வொன்றின் விடயமாக வுள்ள, இடைத்தொடுப்பு உடன்படிக்கைக்கான திறத்தவர்களுக்கு கேட்கப்படுவதற்கும் ஏதேனும் ஆவணச்சான்றை காண்பிப்பதற்குமான வாய்ப் பொன்றை வழங்குதல் வேண்டும்.

(7) புலனாய்வின் மேல் போட்டிக்கெதிரான செயல்முறையொன்று உள்ளது என ஆணைக்குழு திருப்திப்படுகின்றவிடத்து, ஆணைக்குழு, அத்தகைய போட்டிக்கு எதிரான செயல்முறையைத் தவிர்ப்பதற்கு அவசியமானது எனக் கருது கின்றவாறான அத்தகைய நடவடிக்கைகளை எடுப்பதற்கு இடைத்தொடுப்பு உடன்படிக்கைக்கான திறத்தவர்களுக்கு பணிப்புக்களை வழங்கலாம் என்பதுடன் அப்பொருள்பட இடைத்தொடுப்பு உடன்படிக்கையைத் திருத்துவதற்கும் விதப்புரை களைச் செய்யலாம்.

(8) எவரேனும் இயக்குநர்கள், (1) ஆம் உட் பிரிவின்கீழ் ஆணைக்குழுவினால் விதிக்கப்பட்ட தேவைப்பாட்டுடன் இணங்கியொழுகுவதற்கு தவறுகின்றவிடத்து, அத்தகைய இயக்குநரின் தொலைத்தொடர்பு முறைமை, தொலைத்தொடர்பு சேவைகள் மற்றும் தொலைத்தொடர்பு உபகரணத்துக்கான அணுக்கத்தை நாடுகின்ற வேறு எவரேனும் இயக்குநர் அத்தகைய தவறுகை

தொடர்பில் ஆணைக்குழுவுக்கு அறிவிக்கலாம் என்பதுடன் ஆணைக்குழு, அத்தகைய தகவலைப் பெற்றுக்கொண்டதிலிருந்து முப்பது வேலை நாட்களினுள் இரு இயக்குநர்களுடனான கலந்தாலோசனையுடன், இடைத்தொடுப்புச் சேவைகளுக்கான அணுக்கம் மற்றும் அத்தகைய சேவைக்கு அறவிடப்படவேண்டிய விதிப்பனவுகள் உட்பட உத்தேசிக்கப்பட்ட இடைத்தொடுப்பு உடன்படிக்கையின் நியதிநிபந்தனைகளைத் தீர்மானித்தலும் வேண்டும்.

(9) ஆணைக்குழுவினால் (8) ஆம் உட்பிரிவின்கீழ் செய்யப்பட்ட தீர்மானம் இப்பிரிவின்கீழ் இடைத்தொடுப்பு உடன்படிக்கையொன்று செய்துகொள்ளப்படுவதற்கு உத்தேசிக்கப்பட்ட இயக்குநர்கள் மீது பிணிக்கப்படுதல் வேண்டும்.

(10) ஆணைக்குழுவினால் (8) ஆம் உட்பிரிவின்கீழ் செய்யப்பட்ட தீர்மானத்துடன் இணங்கியொழுகுவதற்கு தவறுகின்ற எவரேனும் இயக்குநர் தவறொன்றைப் புரிகின்றார் என்பதுடன் பத்து மில்லியன் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கும் அத்தவறு தொடர்ச்சியாக புரியப்படுகின்ற பட்சத்தில், அத்தவறு குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன் பின்னர் எந்நாளன்று அவ்வாறு புரியப்படுகின்றதோ அந்த ஒவ்வொரு நாளுக்கும் மூன்று இலட்சம் ரூபா மேலதிக குற்றப்பணமொன்றுக்கும் ஆளாதலும் வேண்டும்.

(11) எட்டாம் உட்பிரிவின்கீழான தீர்மானத்தினால் இன்னலுற்ற எவரேனும் இயக்குநர் அத்தகைய தீர்மானத் தேதியிலிருந்து முப்பது நாட்களினுள் மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு அத்தகைய தீர்மானத்துக்கு எதிராக மேன்முறையீடு செய்யலாம்.

(12) ஆணைக்குழு பின்வருவனவற்றுக்கு விதிகளை ஆக்கலாம்:-

(அ) இடைத்தொடுப்பு உடன்படிக்கை யொன்றில் உள்ளடக்கப்படவேண்டிய நியதிநிபந்தனைகளை விதித்தல்;

(ஆ) சேவைகளுக்கான இடைத்தொடுப்பு வீதங்கள் தொடர்பான முறைமையியலைத் தீர்மானித்தல்; அத்துடன்

(இ) இடைத்தொடுப்பு உடன்படிக்கையை நடைமுறைப்படுத்துவதற்கு இடைத் தொடுப்பு உடன்படிக்கைக்கான திறத்த வர்களுக்கு வழிகாட்டுநெறிகள் மற்றும் பணிப்புக்களை வழங்குதல்.”.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 21 ஆம் பிரிவைத் திருத்துதல்

**17.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 21 ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அதன் (1) ஆம் உட்பிரிவில், “இறக்குமதி செய்தல்,” என்னும் சொற்களுக்குப் பதிலாக, “இறக்குமதி செய்தல், ஏற்றுமதி செய்தல்,” என்னும் சொற்களை இடுவதன் மூலமும்; அத்துடன்

(2) அதன் (5) ஆம் உட்பிரிவில், “பத்தாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கும்” என்பதிலிருந்து தொடங்கி அப்பிரிவின் இறுதிவரையுள்ள சொற்க ளுக்குப் பதிலாக, “ஒரு மில்லியன் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொற்றுக்கு அல்லது ஆறு மாதங்களை விஞ்சாதவொரு காலத்துக்கான இருவகையிலொரு வகை மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் அத்தவறு தொடர்ச்சியாக புரியப்படுகின்ற பட்சத்தில், குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டதன் பின்னர் அத்தவறு எந்நாளன்று அவ்வாறு புரியப்படுகின்றதோ அந்த ஒவ்வொரு நாளுக்கும் ஆயிரத்து ஐந்நூறு ரூபா குற்றப்பணமொன்றுக்கும் ஆளாதல் வேண்டும்.”.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 22 ஆம் பிரிவைத் திருத்துதல்

**18.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 22 ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அதன் (1) ஆம் உட்பிரிவில், "ஏதேனும் வானொலி அதிர்வெண்ணை அல்லது வானொலி அதிர்வெண்ணை வெளியேற்றும் ஏதேனும் உபகரணத்தைப் பயன்படுத்துதல் ஆகாது." என்னும் சொற்களுக்குப் பதிலாக, "ஏதேனும் வானொலி அதிர்வெண்ணைப் பயன்படுத்துதலோ அல்லது ஏதேனும் வானொலி அதிர்வெண்ணை வெளியேற்றும் உபகரணத்தைப் பயன்படுத்துதலோ அல்லது உடைமையில் வைத்திருத்தலோ ஆகாது." என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(2) அதன் (2) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில், "அதன்சார்பில் ஆக்கப்பட்ட விதிகளினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான" என்னும் சொற்களுக்குப் பதிலாக "விதித்துரைக்கப்படக்கூடியவாறான" என்னும் சொல்லை இடுவதன்மூலமும்;

(3) அதன் (2) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவை உட்புகுத்துவதன்மூலமும்:-

"(2அ) ஓராம் உட்பிரிவின்கீழ் வழங்கப்பட்ட உரிமமொன்று, அத்தகைய வானொலி அதிர்வெண் அல்லது வானொலி அதிர்வெண் வெளியேற்றுகின்ற உபகரணம் எந்தச் சேவைக்காக அல்லது சேவைகளுக்காக அல்லது நோக்கத்துக்காகப் பயன்படுத்தப்படுகின்றனவோ அந்தச் சேவையை அல்லது சேவைகளை அல்லது நோக்கத்தை மற்றும் அத்தகைய உரிமத்தின் செல்லுபடிக்காலப்பகுதியைக் குறித்துரைத்தல் வேண்டும்.";

(4) அதன் (3) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன்மூலமும்:-

"(3) உரிமமொன்று எந்த நிபந்தனைக்கு அல்லது மட்டுப்பாட்டுக்கு அமைந்ததாகவுள்ளதோ அந்த ஏதேனும் நிபந்தனை அல்லது மட்டுப்பாடு மீறப்படுவதன் மீது அல்லது அதன் கீழ் செலுத்தப் படற்பாலதான ஏதேனும் பிரதிபயனின் கொடுப்பன வில் ஏதேனும் தவணைதவறுகை ஏற்படும் பட்சத்தில் அல்லது அது தொடர்பாக இச்சட்டத்தின் கீழ் அப் போதைக்கு வலுவிலுள்ள ஏதேனும் ஒழுங்குவிதிக்கு உரிமம்பெறுநர் இணங்கியொழுகத் தவறுவதன்மீது ஆணைக்குழுவானது (1) ஆம் உட்பிரிவின் கீழ் வழங்கப்பட்ட ஏதேனும் உரிமத்தை இல்லா தொழிப்பதற்குத் தத்துவமுடையதாதல் வேண்டும்.";

(5) அதன் (3) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவுகளை உட்புகுத்துவதன்மூலமும்:-

"(3அ) ஓராம் உட்பிரிவின் கீழ் அதிர்வெண் உரிமத்தினால் குறித்தளிக்கப்பட்ட ஏதேனும் வானொலி அதிர்வெண்ணை அல்லது அத்தகைய வானொலி அதிர்வெண் எந்தச் சேவைக்காக அல்லது சேவைகளுக்காக அல்லது நோக்கத்துக்காகக் குறித்தளிக்கப்பட்டுள்ளதோ அந்தச் சேவையை அல்லது சேவைகளை அல்லது நோக்கத்தை ஆணைக்குழு காலத்துக்குக்காலம் வேறுபடுத்தலாம் அல்லது மீளப் பெறலாம்.

(3ஆ) ஆணைக்குழு, ஏதேனும் வானொலி அதிர்வெண்ணை, இல்லாதொழிப்பு, வேறுபாடு அல்லது மீளப்பெறுகைபற்றி நியாயமான காலப் பகுதிக்குமுன்னர் இயைபான ஆளுக்கு எழுத்திலான அறிவித்தல் கொடுத்தபின்னரும் அதற்கான காரணங்களைக் கொடுத்தும் அவ்வாறு இல்லா தொழிக்கலாம், வேறுபடுத்தலாம் அல்லது மீளப்பெறலாம்.

(3இ) இயைபான எந்த ஆளின் அதிர்வெண் உரிமம் (3ஆ) என்னும் உட்பிரிவின் கீழ் வேறுபடுத்தப் பட்டுள்ளதோ அல்லது மீளப்பெறப்பட்டுள்ளதோ இயைபான அந்த ஆளுக்கு ஏதேனும் நட்டஈட்டைக் கொடுப்பனவுசெய்வதனை ஆணைக்குழு கவனத்துட் கொள்ளலாம்.

(3ஈ) வானொலி அதிர்வெண் நோக்கெல்லையின் ஒட்டுமொத்தத் திட்டமிடுகையிலும் முகாமைத்துவத் திலும், ஆணைக்குழு, (1) ஆம் உட்பிரிவின் கீழ் உரிமமொன்று வழங்கப்பட்டுள்ள எவரேனுமாளை, பொதுமக்களின் நலன்கருதி வானொலி அதிர்வெண் நோக்கெல்லையின் வினைத்திறனான பாவனைக்காகப் புதிய தொழினுட்பவியல்களுடன் இணங்கியொழுகும் படியும் அவற்றை நடைமுறைப்படுத்தும்படியும் பணிப்பதற்குத் தத்துவம் கொண்டிருத்தல் வேண்டும்.";

(6) அதன் (5) ஆம் உட்பிரிவில், "வானொலி அதிர் வெண்ணைப் பயன்படுத்தும் ஒருவர்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "ஆறாம் உட்பிரிவில் ஏற்பாடுசெய்யப்பட்டவாறுதவிர, வானொலி அதிர் வெண்ணைப் பயன்படுத்தும் ஒருவர்" என்னும் சொற் களை இடுவதன்மூலமும்; அத்துடன்

(7) அதன் (5) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவைச் சேர்ப்பதன்மூலமும்:-

"(6) இப்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், ஆணைக்குழுவானது, பொதுமக்கள் நலன்கருதியும் ஏதேனும் வானொலி அதிர்வெண்ணின் பொதுப்பாவனையை மேம்படுத்துவதற்கெனவும், அதற்கென ஆக்கப் படும் விதிகளின்மூலம், ஒன்றில் முற்றாக அல்லது அத்தகைய விதிகளின்கீழ் விதிக்கப்படக்கூடிய வாறான அத்தகைய நியதிநிபந்தனைகளுக்கும் மட்டுப்பாடுகளுக்கும் அமைய, ஏதேனும் வானொலி அதிர்வெண்ணை வெளியேற்றும்

உபகரணத்தின் பாவனைக்காக அல்லது அதன் பாவனை, உடைமை, தாபிப்பு அல்லது நிறுவுகைக்காக ஓர் உரிமத்தைப் பெற்றுக் கொள்வதிலிருந்து எவரேனுமாளை அல்லது வகுப்பினரான ஆட்களை விலக்களிக்கலாம்.

(7) வானொலி அதிர்வெண்களைக் குறித் தளிப்பதில் ஆணைக்குழுவானது போட்டியடிப் படையிலான முறைமையியலைக் கடைப் பிடிக்கலாமென்பதுடன் அத்தகைய முறைமை யியல், தேவைப்படுகின்றவாறும் தேவைப்படு கின்றபோதும் இச்சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட விதிகள் என்றவகையாகப் பிரகடனப்படுத்தப் படுதலும் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 22அ என்னும் பிரிவைத் திருத்துதல்

**19.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 22அ என்னும் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அதன் (1) ஆம் உட்பிரிவில், "ஏதேனும் வளவில் கம்பிவட இணைப்பு வேலையை" என்னும் சொற்க ளுக்குப் பதிலாக, "நிலத்தின், வீதிகளின் அல்லது இலங்கையின் ஆள்புல நீர்ப்பரப்புகளின்மேல் அல்லது அவற்றின்கீழ், ஏதேனும் வளவில் கம்பிவட இணைப்பு வேலையை" என்னும் சொற்களை இடுவதன்மூல மும்;';

(2) அதன் (3) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன்மூல மும்:-

"(3) பின்வரும் சந்தர்ப்பங்களில், ஆணைக்குழு, எந்நேரத்திலும், இப்பிரிவின்கீழ் வழங்கப்பட்ட ஏதேனும் உரிமத்தை இல்லாதொழிக்கலாம் அல்லது இடை நிறுத்தலாம்:-

(அ) உரிமம்பெறுநரினால் உரிமத்தின் ஏதேனும் நியதி அல்லது நிபந்தனை மீறப்படுவதன்மீது;

(ஆ) (2) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியின் கீழ் ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்பட்ட கட்டணத்தைச் செலுத்துவதற்கு உரிமம் பெறுநர் தவறுவதன்மீது;

(இ) சட்டத்தின் அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதியின் அல்லது விதியின் ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகுவதற்கு உரிமம்பெறுநர் தவறுவதன்மீது; அல்லது

(ஈ) அத்தகைய இல்லாதொழிப்பு அல்லது இடைநிறுத்துகை பொதுமக்கள் நலன்கருதி அல்லது தேசியப் பாதுகாப்பின் நலன்கருதி அவசியமானதெனக் கருதப்படுமிடத்து.".

*முதன்மைச் சட்டவாக்கத்தில் 22அஅ, 22அஆ, 22அஇ மற்றும் 22அஈ என்னும் புதிய பிரிவுகளை உட்புகுத்துதல்*

**20.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 22அ என்னும் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவுகள் இத்தால் உட்புகுத்தப்படுவதுடன் இவை அச்சட்டவாக்கத்தின் 22அஅ, 22அஆ, 22அஇ மற்றும் 22அஈ என்னும் பிரிவுகளாகப் பயனுறுதலும் வேண்டும்:-

*"கடலடிக் கம்பிவடங்களைப் பாதுகாப்பதற்கு ஆணைக்குழு பொறுப்பாதல்*

22அஅ. (1) ஆணைக்குழு இச்சட்டத்தின்கீழ் ஏதேனும் தொலைத்தொடர்புச் சேவையை வழங்குதல் சம்பந்தமாக இலங்கையின் ஆள்புல நீர்ப்பரப்புகளினுள் இடப்பட்ட கடலடிக் கம்பிவடங்களை இலங்கைக் கடற்படையின், கரையோரக் காவல் திணைக்களத்தின் மற்றும் இலங்கைப் பொலிசாரின் உதவியுடன், இப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவின்கீழ் தாபிக்கப்பட்ட தேசியக் கடலடிக் கம்பிவடப் பாதுகாப்புக் குழுவின் மதியுரைக்கமைய கண்காணித்தலும், முகாமைசெய்தலும், பாதுகாத்தலும் வேண்டும்.

(2) (இப்பிரிவில் மற்றும் பிரிவு 22அஆ வில் "குழு" எனக் குறிப்பீடுசெய்யப் படுவதும்) தேசியக் கடலடிக் கம்பிவடப் பாதுகாப்புக் குழு எனவழைக்

கப்பட்டு அறியப்படுவதும் பின்வரும் உறுப்பினர் களைக் கொண்டுள்ளதுமான குழுவொன்று தாபிக்கப்படுதல் வேண்டும்:-

(அ) குழுவின் தவிசாளராகவிருக்கவேண்டிய ஆணைக்குழுவின் பணிப்பாளர் தலைமை யதிபதி;

(ஆ) கடற்படை ஏவுநரினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட இலங்கைக் கடற்படை யின் அலுவலரொருவர்;

(இ) கரையோரக் காவல் திணைக்களத்தின் பணிப்பாளர் தலைமையதிபதியினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட அத்தகைய திணைக்களத்தின் கரையோரக் காவல் அலுவலரொருவர்;

(ஈ) பொலிசுப் பரிசோதகர் தலைமையதி பதியினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட பொலிசுப் படையின் பொலிசு அலுவலரொருவர்;

(உ) (235 ஆம் அத்தியாயமான) சுங்கக் கட்டளைச்சட்டத்தின் 2 ஆம் பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட சுங்கப் பணிப்பாளர் தலைமையதிபதியினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட சுங்க அலுவலரொரு வர்;

(ஊ) கடற்றொழில் மற்றும் நீர்வாழ் உயிரின வளங்கள் என்னும் விடயம் குறித் தளிக்கப்பட்ட அமைச்சரின் அமைச்சுக் கான செயலாளரினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்டவரும் சிரேட்ட உதவிச் செயலாளர் என்ற பதவிவரிசைக்குக் குறையாத பதவிவரிசையிலுள்ளவருமான அலுவலரொருவர்;

(எ) 2008 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, கடல்சார் தீழ்ப்புத் தடுப்புச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட கடல்சார் சூழற் பாதுகாப்பு அதிகாரசபையின் பொது முகாமையாளரினால் பெயர்குறித்துநியமிக்கப்பட்ட அத்தகைய அதிகாரசபையின் அலுவலரொருவர்;

(ஏ) 1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க, தேசிய சூழற் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட மத்திய சூழல் அதிகாரசபையின் பணிப்பாளர் தலைமையதிபதியினால் பெயர்குறித்துநியமிக்கப்பட்ட அத்தகைய அதிகாரசபையின் அலுவலரொருவர்;

(ஐ) ஒரு கம்பிவட இடுகை நிலையத்தைத் தொழிற்படுத்துவதற்கு 17ஆ என்னும் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (இ) என்னும் பந்தியின்கீழ் உரிமங்கள் வழங்கப்பட்ட வழங்குநர்கள்; அத்துடன்

(ஒ) 1971 ஆம் ஆண்டின் 52 ஆம் இலக்க, வணிகக் கப்பற்றொழிற் சட்டத்தின் 3 ஆம் பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட வணிகக் கப்பற்றொழில் பணிப்பாளர் தலைமையதிபதியினால் பெயர்குறித்துநியமிக்கப்பட்ட அலுவலரொருவர்;

(3) குழுவானது பின்வரும் தத்துவங்களையும் பணிகளையும் கொண்டிருத்தல் வேண்டும்:-

(அ) இச்சட்டத்தின்கீழ் ஏதேனும் தொலைத்தொடர்புச் சேவையை வழங்குதல் சம்பந்தமாக இலங்கையின் ஆள்புல நீர்ப்பரப்புகளினுள் இடப்பட்ட கடலடிக் கம்பிவடங்களைக் கண்காணிப்பதிலும், முகாமைசெய்வதிலும், பாதுகாப்பதிலும் ஆணைக்குழுவுக்கு மதியுரையளித்தல்;

(ஆ) கடலடிக் கம்பிவடங்களையும் மற்றும் கடலடிக் கம்பிவட இடுகை நிலையங்களின் பாதுகாப்பும் அவற்றின் நெகிழ்வுத் தன்மையும் தொடர்பான கொள்கைகளின் வகுத்தமைத்தல்களில் அமைச்சருக்கு விதப்புரைகளைச் செய்தல்; அத்துடன்

(இ) விதித்துரைக்கப்படக்கூடியவாறான வேறேதேனும் தத்துவங்களை அல்லது பணிகளைப் பிரயோகித்தல் அல்லது நிறைவேற்றுதல்.

*சனாதிபதியினால் பாதுகாப்பு வலயம் வெளிப் படுத்தப்படுதல்*

22அஆ. (1) சனாதிபதி, வர்த்தமானியில் வெளியிடப்படும் பிரகடனத்தின்மூலம், அமைச்சரினால் செய்யப்பட்ட விதப்புரையின் மீது, ஒரு கடலடிக் கம்பிவடம் மற்றும் கடலடிக் கம்பிவட இடுகை நிலையம் தொடர்பாகப் பாதுகாப்பு வலயமாகவிருப்பதற்கு, (இதனகத்துப்பின்னர் “பாதுகாப்பு வலயம்” எனக் குறிப்பீடுசெய்யப்படும்) பிரத்தியேகப் பொருளாதார வலயமுட்பட ஆள்புல நீர்ப்பரப்புகளுக்கு அருகாமையிலுள்ள கடலின் ஏதேனும் வலயத்தை வெளிப்படுத்தலாம்.

(2) அமைச்சர், (1) ஆம் உட்பிரிவின்கீழ் விதப்புரைகளைச் செய்யுமுன்னர், அத்தகைய கருமம் தொடர்பில் குழுவின் விதப்புரைகளைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

(3) ஓராம் உட்பிரிவின்கீழான பாதுகாப்பு வலயமொன்றாக ஏதேனும் வலயத்தை வெளிப்படுத்தும்படி எவரேனும் இயக்குநர் அமைச்சரைக் கோருமிடத்து, அமைச்சர் குழுவின் விதப்புரைகளைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டுமென்பதுடன் அவரது விதப்புரைகளைச் சனாதிபதிக்குச் சமர்ப்பித்தலும் வேண்டும்.

(4) சனாதிபதி அத்தகைய வலயத்தைப் பாதுகாப்பு வலயமொன்றாக வெளிப்படுத்துவதற்கு மறுக்குமிடத்து, அமைச்சர், இயைபான இயக்குநருக்கு அத்தகைய முடிபு அறிவிக்கப்படுவதனைச் செய்வித்தல் வேண்டும்.

(5) சனாதிபதியின் முடிபினால் இன்னலுறும் இயக்குநரொருவர், அத்தகைய முடிபுத் தேதியிலிருந்து நாற்பத்தைந்து நாட்களினுள் அமைச்சருக்கு மேன்முறையீடு செய்யலாம்.

(6) அமைச்சர், குழுவின் கலந்தாலோசனையுடன், மேன்முறையீட்டின்மீதான அவரது விதப்புரைகளைச் சனாதிபதிக்குச் செய்தல் வேண்டுமென்பதுடன் சனாதிபதி, மேன்முறையீட்டின்மீதான முடிபை, அத்தகைய மேன்முறையீடு பெறப்பட்ட தேதியிலிருந்து நாற்பத்தைந்து நாட்களினுள் செய்யலாம். இவ்வுட்பிரிவின்கீழ் செய்யப்பட்ட சனாதிபதியின் முடிபு இறுதியானதும் முற்றானதுமாதல் வேண்டும்.

(7) ஓராம் உட்பிரிவின்கீழ் செய்யப்பட்ட பிரகடனமொன்று அதேமுறையில் சனாதிபதியினால் இல்லாதொழிக்கப்படலாம் அல்லது வேறுபடுத்தப்படலாம்.

பாதுகாப்பு வலயத்தினுள் குறித்தசில செயற்பாடுகளைத் தடைசெய்தல்

22அஇ. (1) ஆணைக்குழுவானது, குழுவின் கலந்தாலோசனையுடன், ஏதேனும் பாதுகாப்பு வலயத்தில், அதன்மீது அல்லது அதன்கீழ் நிறைவேற்றப்படுவதற்குத் தடைசெய்யப்பட்ட செயற்பாடுகளைக் குறித்துரைப்பதற்கான விதிகளை ஆக்குதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் அளிக்கப்பட்ட தத்துவங்களின் பொதுமைக்குப் பங்கமின்றி, ஆணைக்குழுவானது, பின்வருவனவற்றுக்காக விதிகளை ஆக்குதல் வேண்டும்:-

(அ) பின்வரும் மீன்பிடித்தல் முறைகளினதும் சாதனங்களினதும் பாவனையைத் தடை செய்தும்:-

(i) கடற்படுக்கையின் மீது அல்லது அதற்கண்மையில் வேலை செய்வதற்கு வடிவமைக்கப்பட்ட இழுவை மீன்பிடிக்கருவிகள்;

(ii) கடற்படுக்கையுடன் நங்கூரமிடப்பட்டு மிதப்பதன் மூலம் நேராக நிமிர்த்திவைக்கப்படும் வலையொன்று;

(iii) கடற்படுக்கையில் அல்லது அதற்கண்மையில் மீன்பிடிப்பதற்கு வடிவமைக்கப்பட்ட மீன்பிடித் தூண்டிலொன்று;

(iv) சேறுவாரியொன்று;

(v) பானை அல்லது பொறியொன்று;

(vi) பெரிய மீன்பிடி வலையொன்று;

(vii) மீன்களைப் பிடிப்பதற்கான பிரதான பணியுடன் கடற்படுக்கையுடன் நங்கூரமும் சங்கிலியும் இடப்பட்ட கட்டமைப்பொன்று;

(ஆ) பின்வருவனவற்றை இழுப்பதனை, தொழிற்படுத்துவதனை அல்லது ஒரு கப்பலிலிருந்து தொங்கவிடுவதனைத் தடைசெய்தல்:-

(i) பந்தி (அ) வில் குறிப்பிடப்பட்ட ஏதேனும் இனம்; அல்லது

(ii) மீன் பிடித் தொழிற் பாடுகள் சம்பந்தமாகப் பயன்படுத்தப்பட்ட

வலை, கயிறு, சங்கிலி அல்லது வேறேதேனும் வஸ்து ஒன்று;

(இ) ஒரு கப்பலிலிருந்து நங்கூரமொன்றைக் கீழிறக்குதலை, உயர்த்துதலை அல்லது தொங்கவிடுதலைத் தடைசெய்தல்;

(ஈ) மணல் சுரங்கவேலையைத் தடைசெய்தல்;

(உ) (கடல்சார் இனங்கள்தவிர) வளங்களைத் தேடிக்கண்டுபிடித்தலை அல்லது பயன் படுத்துதலைத் தடைசெய்தல்;

(ஊ) சுரங்கந்தோண்டுதலை அல்லது சுரங்கந் தோண்டுதல் தொழினுட்பங்களின் பாவனையைத் தடைசெய்தல்;

(எ) ஒரு பொருளுக்கும் ஒரு கடலடிக் கம்பி வடத்துக்கும் இடையேயான தொடுப்பு, கடலடிக் கம்பிவடத்தைச் சேதப்படுத்து வதற்கு இயன்றதாகவிருக்குமாயின், அப்பொருள் கடற்படுக்கையுடன் தொடுக்குமென்ற பாரதூரமான ஆபத்தை உட்படுத்துகின்ற ஏதேனும் செயற்பாட்டைத் தடைசெய்தல்; அல்லது

(ஏ) கடலடிக் கம்பிவடத்துக்கண்மையில் செய்யப்படின், கடலடிக் கம்பிவடத்தைச் சேதப்படுத்துவதற்கான பாரதூரமான ஆபத்தை உட்படுத்தும் ஏதேனும் செயற்பாட்டைத் தடைசெய்தல்.

*பிடியாணையின்றிக் கைது செய்தல்*

22அஈ. (1) பிரிவு 22அஇ இன்கீழான தவறொன்றைப் புரிகின்ற அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் விதியை மீறுகின்ற எவரேனுமாளை எவரேனும் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் ஆள்புலநீர்ப்பரப்புகளில் அல்லது ஒரு

பாதுகாப்பு வலயத்தினுள் உட்பட இலங்கையினுள் பிடியாணையின்றிக் கைதுசெய்யலாமென்பதுடன் தகுதிவாய்ந்த நியாயாதிக்கங்கொண்ட மேல் நீதிமன்றத்தின்முன் அவரை நிறுத்தலாம்.

(2) ஆளொருவர் (1) ஆம் உட்பிரிவின்கீழ் கைதுசெய்யப்படுமிடத்து, அத்தகைய ஆள் எந்தத் தவறு தொடர்பில் கைதுசெய்யப்பட்டுள்ளாரோ அந்தத் தவறைப் புரிவதில் பயன்படுத்தப்பட்டுள்ள ஏதேனும் வஸ்து கைப்பற்றப்பட்டு, தகுதிவாய்ந்த நியாயாதிக்கங்கொண்ட மேல் நீதிமன்றத்தினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான ஓரிடத்தில் தடுத்துவைக்கப்படலாம்.

(3) அதற்கென எழுத்தில் பெயர்குறிக்கப்பட்ட பின்வரும் அலுவலர்கள் இப்பிரிவின் நோக்கங் களுக்காக அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரொரு வராகவிருத்தல் வேண்டும்:-

(அ) சார்ஜண்டு என்ற பதவிவரிசைக்குக் குறையாத பதவிவரிசையிலுள்ள பொலிசுப்படையின் பொலிசு அலுவல ரொருவர்;

(ஆ) போர்வீரர் என்ற பதவிவரிசைக்குக் குறையாத பதவிவரிசையிலுள்ள தரைப்படையின் உறுப்பினரொருவர்;

(இ) சிறுநிலை அலுவலர் என்ற பதவி வரிசைக்குக் குறையாத பதவிவரிசை யிலுள்ள இலங்கைக் கடற்படையின் உறுப்பினரொருவர்;

(ஈ) சார்ஜண்டு என்ற பதவிவரிசைக்குக் குறை யாத பதவிவரிசையிலுள்ள இலங்கை வான்படையின் உறுப்பினரொருவர்; அல்லது

(உ) கரையோரக் காவல் திணைக்களத்தின் அலுவலரொருவர்.

(4) ஒவ்வோர் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரும் 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தின் கருத்துக்குட்படவும் அதன் நோக்கங்களுக்காகவும் சமாதான அலுவலரொருவராகக் கருதப்படுதல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக் கத்தின் 22ஊ என்னும் பிரிவைத் திருத்துதல்

**21.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 22ஊ என்னும் பிரிவு, அதன் (2) ஆம் உட்பிரிவில் இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அதன் (இ) என்னும் பந்தியில், ''வருவாய்கள்; அத்துடன்'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, "வருவாய்கள்;" என்னும் சொல்லை இடுவதன்மூலமும்; அத்துடன்

(2) அதன் (இ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் பந்தியை உட்புகுத்துவதன்மூலமும்:-

"(இஅ) 11 ஆம் பிரிவின் (8) ஆம் உட்பிரிவின்கீழ் ஆணைக்குழுவினால் விதிக்கப்பட்ட தண்டமாகச் சேகரிக்கப்பட்ட அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும்; அத்துடன்.".

முதன்மைச் சட்டவாக்கத்தில் புதிய பாகம் IIஇ ஐ உட்புகுத்துதல்

**22.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 22ஒ என்னும் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பாகம் இத்தால் உட்புகுத்தப் படுவதுடன் இது அச்சட்டவாக்கத்தின் பாகம் II இ எனப் பயனுறுதலும் வேண்டும்:-

"பாகம் IIஇ

**உரிமக்கட்டணம் மற்றும் ஆயவரிமீது மிகைக்கட்டணத்தை விதித்தல்**

இச்சட்டத்தின் கீழ் ஏதேனும் உரிமக் கட்டணம் அல்லது ஆயவரியின் கொடுப்பன விலான தவணை தவறுகை யின் மீது ஆணைக்குழு மிகைக் கட்டணைத்தை விதித்தல்

22ஓ. (1) விடயத்துக்கேற்ப, பிரிவு 17, 17ஆ, 21 அல்லது 22 என்பவற்றின் கீழ் உரிமமொன்று வழங்கப்பட்டுள்ள எவரேனும் இயக்குநர், வழங்குநர் அல்லது உரிமம்பெறுநர், ஏதேனும் கொடுப் பனவைச் செய்வதற்கு ஆணைக்குழுவினால் குறித்துரைக்கப்பட்ட தேதியன்று அல்லது தேதிக்கு முன்னர் அப்பிரிவுகளின் நியதிகளின்படி செலுத்து வதற்குத் தேவைப்படுத்தப்பட்ட அத்தகைய ஏதேனும் கட்டணத்தைச் செலுத்துவதற்குத் தவறியுள்ளவிடத்து அல்லது 17 ஆம் பிரிவின்கீழ் அல்லது 17ஆ என்னும் பிரிவின்கீழ் வழங்கப்பட்ட உரிமத்தில் குறித்துரைக்கப்பட்ட உரிய தேதியன்று அல்லது அத்தேதிக்குமுன்னர் 22எ என்னும் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கட்டளையொன்றின்மூலம் செலுத்தப்படுவதற்குத் தேவைப்படுத்தப்பட்ட ஏதேனும் ஆயவரியைச் செலுத்துவதற்குத் தவறியுள்ள இயக்குநரொருவர், முதலாவது மாதத் துக்காகத் தவணைதவறிய தொகையின் பத்துச் சதவீதத்திலும் அத்துடன் மேலதிகமாக ஒவ்வோர் அடுத்துப் பின்னரான மாதத்துக்கும் இரண்டு சதவீதத்திலும் தவணைதவறிய தொகையின்மீது மிகைக் கட்டணமொன்றைச் செலுத்துவதற்கு ஆளாதல் வேண்டும்.

(2) ஆணைக்குழுவானது, மிகைக்கட்டணம் எந்த ஆள்தொடர்பில் விதிக்கப்படவேண்டுமோ அந்த ஆள் ஒவ்வொருவருக்கும் பின்வரும் விபரங்களைக் குறித்துரைக்கின்ற அறிவித்தலொன்றை வழங்குதல் வேண்டும்:-

(அ) மிகைக்கட்டணம் விதிப்பதற்கான கார ணங்கள்;

(ஆ) தவணைதவறுகையிலுள்ள தொகையும் அதன்மீது முடிபு செய்யப்பட்ட மிகைக் கட்டணமும்;

(இ) அதன் அறவீட்டுக்காக உத்தேசிக்கப்பட்ட நடவடிக்கை;

(ஈ) பந்தி (ஆ) வின்கீழ் குறித்துரைக்கப்பட்ட தொகை எத்தேதியன்று அல்லது எத் தேதிக்குமுன்னர் செலுத்தப்பட வேண்டுமோ அத்தேதி; அத்துடன்

(உ) கொடுப்பனவு செய்யப்படவேண்டிய முறைபற்றிய விபரங்கள்.

ஒரு நீதிவான் முன்னர் அறவிடுவதற்கான வழக்கு நடவடிக்கைகள்

22ஔ. (1) பிரிவு 22ஓ இன்கீழ் விதிப்பனவு செய்யப்படவேண்டிய ஏதேனும் பணத்தொகை 22ஓ என்னும் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின்கீழான அறிவித்தலிற் குறித்துரைக்கப்பட்ட காலத்தினுள் செலுத்தப்பட்டிராதவிடத்தும், அத்தகைய பணத்தொகையை அறவிடுவதற்காக உடனடி நடவடிக்கை அவசியமாகவுள்ளதென ஆணைக்குழு திருப்திப்படுமிடத்தும், ஆணைக்குழுவானது, அறவிடப்படவேண்டிய அத்தகைய பணத்தொகையின் விபரங்களையும், அத்தகைய பணத்தொகையைச் செலுத்துவதற்கு ஆளாகவுள்ள ஆளின் பெயரையும் கடைசியாக அறியப்பட்ட அவரது தொழிலிடத்தையும் அல்லது வதிவிடத்தையும் கொண்டுள்ள சான்றிதழொன்றை தகுதிவாய்ந்த நியாயாதிக்கமுள்ள நீதிவான் நீதிமன்றத்துக்கு வழங்கலாம்.

(2) (அ) நீதிவான், அதன்மேல், அறவிடப்படவேண்டிய பணத்தொகையை அறவிடுவதற்காகத் தவணைதவறுகையிலுள்ள தொகையைச் செலுத்துவதற்கு ஆளாகவுள்ள அத்தகைய ஆளுக்கெதிராக மேலதிக வழக்குநடவடிக்கைகள் ஏன் எடுக்கப்

படுதலாகாதெனக் காரணம் காட்டும்படி அவரைக் கட்டளைவிட்டழைத்தல் வேண்டும்.

(ஆ) தவணைதவறுகையிலுள்ள தொகையைச் செலுத்துவதற்கு ஆளாகவுள்ள ஆள் போதிய காரணங்காட்டத் தவறுமிடத்து, அறவிடப்பட வேண்டிய பணத்தொகை, குற்றப்பணத்தினால் மட்டுமே தண்டிக்கப்படற்பாலதானதும் மறியற் றண்டனையினால் தண்டிக்கப்படற்பாலதல்லாதது மான தவறொன்றுக்காகத் தவணைதவறுகையி லுள்ள தொகையைச் செலுத்துவதற்கு ஆளாகவுள்ள அத்தகைய ஆளின்மீது நீதிவானின் தண்டனைத் தீர்ப்பினால் விதிக்கப்பட்ட குற்றப்பணமொன்றாகக் கருதப்படுதல் வேண்டும்.

(3) ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட சான்றிதழ், அறவிடப்படவேண்டிய பணத்தொகை முறையாக மதிப்பிடப்பட்டுள்ளதென்பதற்கும் தவணைதவறுகையிலுள்ளதென்பதற்கும் (1) ஆம் உட்பிரிவின்கீழ் நீதிவானின்முன்னரான ஏதேனும் வழக்குநடவடிக்கையில் முடிவான எண்ணிப்பாதல் வேண்டும்.

(4) ஆயிரத்துத்தொளாயிரத்து எழுபத்தொன் பதாமாண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தின் அத்தியாயம் XXIV இன் ஏற்பாடுகள், குற்றப் பணமொன்றின் கொடுப்பனவிலான தவணை தவறுகை தொடர்பாக ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டுமென்பதுடன் அத்துடன் மேலதிகமாக, நீதிவானொருவர், அத்தகைய தண்டனைத்தீர்ப்பை விதிக்கின்ற நேரத்தில் அவர் விடுத்திருக்கக்கூடிய ஏதேனும் பணிப்பையும் விடுக்கலாம்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 33, 34 மற்றும் 35 ஆம் பிரிவுகளைத் திருத்துதல்*

**23.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 33, 34 மற்றும் 35 ஆம் பிரிவுகள், ''இயக்குநர்'', ''இயக்குநரால்'', ''இயக்குநருக்கு'', "இயக்குநரிடம்'' மற்றும் 'இயக்குநருக்காகவும்'' என்னும் சொற்கள் அப்பிரிவுகளில் காணப்படும் இடங்களிலெல்லாம் அவற்றுக்குப் பதிலாக, "இயக்குநர் அல்லது வழங்குநர்'', "இயக்குநரால் அல்லது வழங்குநரால்'', ''இயக்குநருக்கு அல்லது வழங்குநருக்கு'', "இயக்குநரிடம் அல்லது வழங்குநரிடம்" மற்றும் "இயக்குநருக்காகவும் அல்லது வழங்குநருக்காகவும்'' என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றன.

*முதன்மைச் சட்டவாக்கத்தில் 35அ மற்றும் 35ஆ என்னும் புதிய பிரிவுகளை உட்புகுத்துதல்*

**24.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 35 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவுகள் இத்தால் உட்புகுத்தப்படுவதுடன் இவை அச்சட்டவாக்கத்தின் 35அ மற்றும் 35ஆ என்னும் பிரிவுகளாகப் பயனுறுதலும் வேண்டும்:-

*"உட்கட்டமைப்பு வசதிகளை அல்லது வளங்களைப் பகிர்தல்*

35அ. (1) இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய, ஓர் இயக்குநரினால் அல்லது வழங்குநரினால் செய்யப்பட்ட கோரிக்கையின்மீது, ஓர் உள்ளூர் அதிகாரசபையினால் அல்லது ஒரு பகிரங்கக் கூட்டுத்தாபனத்தின் அல்லது வேறு குழுவின் பணிப்பாளர் சபையினால் அல்லது வேறு குழுவினால் சொந்தமாக வைத்திருக்கப்பட்டவையும் அல்லது உடைமைகொள்ளப்பட்டவையும் இச்சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்ட விதிகளினால் குறித்துரைக்கப்பட்டவையுமான எவையேனும் உட்கட்டமைப்பு வசதிகளை அல்லது வளங்களைப் பகிர்வதற்காக, அத்தகைய இயக்குநர் தொழிற் படுத்துவதற்கு உரிமமளிக்கப்படுகின்ற தொலைத் தொடர்பு முறைமையொன்றின்மூலம் தொலைத் தொடர்புச் சேவையொன்றை வழங்குகின்ற அல்லது இச்சட்டத்தின் கீழ் அத்தகைய வழங்குநர் வழங்குவதற்கு உரிமமளிக்கப்படுகின்ற வேறு சேவையை அல்லது வசதிகளை அல்லது வளங்களை வழங்குகின்ற நோக்கத்துக்காக எவரேனும் இயக்குநருக்கு அல்லது வழங்குநருக்கு உதவுதல்

அத்தகைய உள்ளூர் அதிகாரசபையினது முதல்வரின் அல்லது தவிசாளரின் அல்லது பகிரங்கக் கூட்டுத்தாபனத்தினது அல்லது குழுவினது பணிப்பாளர் சபையின் அல்லது முகாமைத்துவத்தின் கடமையாதல் வேண்டும்.

(2) இப்பிரிவின் ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதனை ஒழுங்குபடுத்துவதற்கு இச்சட்டத்தின்கீழ் விதிகள் ஆக்கப்படுதல் வேண்டும்.

**இயக்குநர்களினால் வசதிகள் அல்லது வளங்கள் பகிரப்படுதல்**

35ஆ. (1) ஆணைக்குழுவானது, பொதுமக்களின் நலன்கருதி, எவரேனும் இயக்குநரினால் சொந்தமாக வைத்திருக்கப்பட்ட அல்லது பயன்படுத்தப்பட்ட வானொலி அணுகுகை வலைத்தளமுட்பட ஏதேனும் வசதியின் அல்லது வளத்தின் பாவனையைப் பகிர்வதற்கு வேறோர் இயக்குநருடன் ஒருங்கிணைந்து ஒத்துழைக்கும்படி அத்தகைய இயக்குநரை எழுத்தில் பணிக்கலாம்.

(2) ஆணைக்குழுவானது, (1) ஆம் உட்பிரிவின் கீழான பணிப்பை வழங்குமுன்னர், அத்தகைய வசதியை அல்லது வளத்தை ஒரு வினைத்திறனான முறையில் பகிர்வதனை வசதிப்படுத்துவதற்கென, முறையீடுகளைச் செய்வதற்கு அத்தகைய இரு இயக்குநர்களுக்கும் நியாயமான வாய்ப்பை வழங்குதல் வேண்டும்.

(3) இப்பிரிவின் ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதனை ஒழுங்குபடுத்துவதற்கு ஆணைக் குழுவானது விதிகளை ஆக்குதல் வேண்டும்.".

**முதன்மைச் சட்டவாக்கத்தின் 36 ஆம், 37 ஆம் பிரிவுகளைத் திருத்துதல்**

**25.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 36 ஆம், 37 ஆம் பிரிவுகள், "இயக்குநர்", "இயக்குநரினால்" மற்றும் 'இயக்குநரால்' என்னும் சொற்கள் அப்பிரிவுகளில் காணப்படும் இடங்களிலெல்லாம் அவற்றுக்குப் பதிலாக, "இயக்குநர் அல்லது வழங்குநர்", "இயக்குநரினால் அல்லது வழங்குநரினால்" மற்றும் "இயக்குநரால் அல்லது வழங்குநரால்" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றன.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 38 ஆம் பிரிவைத் திருத்துதல்*

**26.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 38 ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) "இயக்குநருக்கும்" என்னும் சொல்லுக்குப் பதிலாக, "இயக்குநருக்கும் அல்லது வழங்குநருக்கும்" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்; அத்துடன்

(2) அதன் (1) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில், "36 ஆம் பிரிவின்கீழ்" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, "35அ என்னும் பிரிவின்கீழ் அல்லது 36 ஆம் பிரிவின்கீழ்" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன்மூலமும்.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 39 ஆம், 40 ஆம் பிரிவுகளைத் திருத்துதல்*

**27.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 39 ஆம், 40 ஆம் பிரிவுகள், "இயக்குநர்", "இயக்குநரொருவருக்கு", "இயக்குநரால்", "இயக்குநரை", "இயக்குநரொருவரினால்", "இயக்குநருக்கு" மற்றும் "இயக்குநரொருவர்" என்னும் சொற்கள் அப்பிரிவுகளில் காணப்படும் இடங்களிலெல்லாம் அவற்றுக்குப் பதிலாக, "இயக்குநர் அல்லது வழங்குநர்", "இயக்குநரொருவருக்கு அல்லது வழங்குநரொருவருக்கு", "இயக்குநரால் அல்லது வழங்குநரால்", "இயக்குநரை அல்லது வழங்குநரை", "இயக்குநரொருவரினால் அல்லது வழங்குநரொருவரினால்", "இயக்குநருக்கு அல்லது வழங்குநருக்கு" மற்றும் "இயக்குநரொருவர் அல்லது வழங்குநரொருவர்" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றன.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 43 ஆம் பிரிவைத் திருத்துதல்*

**28.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 43 ஆம் பிரிவு, அதன் (2) ஆம் உட்பிரிவில், "ஓராம் உட்பிரிவின்கீழான தவறுகள் யாவும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "இச்சட்டத்தின் 22அஇ என்னும் பிரிவில் குறித்துரைக்கப்பட்ட தவறுகள்தவிர்ந்த (1) ஆம் உட்பிரிவின்கீழான தவறுகள் யாவும்" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

**29.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 44 ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 44 ஆம் பிரிவைத் திருத்துதல்*

(1) அதன் (1) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன்மூலமும்:-

“(1) பத்தொன்பதாம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழ் மற்றும் 22 ஆம் பிரிவின்கீழ் தவறொன்றுக்குக் குற்றவாளியாகவுள்ள ஆளொவ்வொருவரும் நீதிவானொருவரினால் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மீது ஐம்பதாயிரம் ரூபாவுக்குக் குறையாததும் பத்து மில்லியன் ரூபாவை விஞ்சாததுமான குற்றப்பணமொன்றுக்கு அல்லது ஆறுமாதங்களுக்குக் குறையாததும் மூன்றாண்டுகளை விஞ்சாததுமானவொரு காலத்துக்கு இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் அத்துடன் அத்தவறு தொடர்ந்துபுரியப்படும் பட்சத்தில், குற்றத்தீர்ப்பளிப்பின் பின்னர் தவறானது அவ்வாறு புரியப்படும் ஒவ்வொரு நாளுக்கும் இரண்டாயிரம் ரூபாவான குற்றப்பணமொன்றுக்கும் ஆளாதல் வேண்டும்.”;

(2) அதன் (1) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவுகளை உட்புகுத்துவதன்மூலமும்:-

“(1அ) ஓராம் உட்பிரிவின்கீழ் விதிக்கப்பட்ட தண்டத்துடன்சேர்த்து மேலதிகமாக, நீதிவானொருவர், 19 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழான தவறைப் புரிவதில் பயன்படுத்தப்பட்ட எல்லாத் தொலைத் தொடர்பு உபகரணங்களையும் பறிமுதல் செய்வதற்கான கட்டளையொன்றை ஆக்கலாம்.

(1ஆ) பிரிவு 17ஆ வின் (2) ஆம் உட்பிரிவின்கீழான தவறொன்றுக்குக் குற்றவாளியாகவுள்ள ஆள் ஒவ்வொருவரும் நீதிவானொருவரினால் குற்றத் தீர்ப்பளிக்கப்படுவதன்மீது ஐந்து மில்லியன் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது

முன்றாண்டுகளை விஞ்சாதவொரு காலத்துக்கு இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் அத்துடன் தவறானது தொடர்ந்து புரியப் படும் பட்சத்தில் குற்றத்தீர்ப்பளிப்பின் பின்னர் தவறு அவ்வாறு புரியப்படும் ஒவ்வொரு நாளுக்கும் பத்தா யிரம் ரூபாவான குற்றப்பணமொன்றுக்கும் ஆளாதல் வேண்டும்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தில் 46அ, 46ஆ மற்றும் 46இ என்னும் புதிய பிரிவுகளை உட்புகுத்துதல்*

**30.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 46 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவுகள் இத்தால் உட்புகுத்தப்படுகின்றன வென்பதுடன் இவை அச்சட்டவாக்கத்தின் 46அ, 46ஆ மற்றும் 46இ என்பனவாகப் பயனுறுதலும் வேண்டும்:-

"தொலைத் தொடர்பு முறைமையுடன் தலையிடுதல் முதலியன

46அ. எந்தத் தொலைத்தொடர்பு முறைமை தொடர்பில் 17 ஆம் பிரிவின்கீழ் உரிமமொன்று வழங்கப்பட்டுள்ளதோ அந்த ஏதேனும் தொலைத்தொடர்பு முறைமையுடன் அல்லது 22 ஆம் பிரிவின்கீழ் எந்த வானொலி அதிர்வெண்ணை வெளியேற்றுகின்ற உபகரணம் தொடர்பில் உரிமமொன்று வழங்கப்பட்டுள்ளதோ அந்த ஏதேனும் வானொலி அதிர்வெண்ணை வெளியேற்றுகின்ற உபகரணத்துடன் வேண்டுமென்று தலையிடுகின்ற, அதனைத் துண்டிக்கின்ற அல்லது குழப்புகின்ற ஒவ்வோராளும் தவறொன்றைப் புரிகின்றாரென்பதுடன் நீதிவானொருவரினால் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மீது ஐந்து மில்லியன் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு ஆளாதலும் வேண்டும்.

தொலைத் தொடர்பு முறைமையொன்றைப் பயன்படுத்துகின்ற ஆட்களை ஏமாற்றுதல் அல்லது பிழை வழியுய்த்தல்

46ஆ. வேறெவரேனுமாளைப் பிறழ்பிரதிநிதித்துவம் செய்கின்ற, ஏமாற்றுகின்ற அல்லது பிழைவழியுய்க்கின்ற உட்கருத்துடன் அழைக்கின்ற திறத்தவரின் இலக்கத்தை விட்டுவிடுகின்ற, மாற்றுகின்ற அல்லது திரிபுபடுத்துகின்ற அல்லது அவரது சொந்த இலக்கத்தைத் தவிர்ந்த அழைக்கின்ற திறத்தவரின் வேறேதேனும் இலக்கத்தை

அறிமுகப்படுத்துகின்ற ஆள் ஒவ்வொருவரும் தவறொன்றைப் புரிகின்றாரென்பதுடன் நீதிவானொருவரினால் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மீது பத்து மில்லியன் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கும் மூன்றாண்டுகளை விஞ்சாததான காலத்துக்கு இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கும் அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும்.

தொலைத் தொடர்புச் சேவையைப் பெற்றுக் கொள்வதற்குப் பாவனை யாளரின் ஆளடையாளம் பற்றிப் பொய்யான தகவல்களை வழங்குதல்

46இ. தொலைத்தொடர்புச் சேவையைப் பெற்றுக் கொள்வதற்குப் பாவனையாளரின் ஆளடையாளம் பற்றிப் பொய்யான தகவல்களை வேண்டுமென்று வழங்குகின்ற ஆளொவ்வொருவரும் தவறொன்றைப் புரிகின்றாரென்பதுடன் நீதிவானொருவரினால் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மீது ஒரு இலட்சம் ரூபாவுக்குக் குறையாததும் ஒரு மில்லியன் ரூபாவை விஞ்சாததுமான குற்றப்பணமொன்றுக்கும் ஓராண்டுக்குக் குறையாததும் மூன்றாண்டுகளை விஞ்சாததுமானவொரு காலத்துக்கு இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கும் அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும்.".

**31.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 47 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது:- முதன்மைச் சட்டவாக்கத்தின் 47 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்

"தொலைத் தொடர்பு நிறுவுகையை வேண்டுமென்று சேதப்படுத்துவதற்கான அல்லது அதனோடு கையிடுவதற்கான தண்டம்

47. (அ) ஏதேனும் செய்தியை, தொலைத் தொடர்புச் சேவையை அல்லது தரவைக் கடத்துவதனை அல்லது ஒப்படைப்பதனைத் தடுக்கும் அல்லது அதற்கு முட்டுக்கட்டையிடும்; அல்லது

(ஆ) ஏதேனும் செய்தியின் அல்லது தரவின் உள்ளீடுகளை இடையீடுசெய்யும் அல்லது அறிந்துகொள்ளும்; அல்லது

(இ) கடத்துவதற்கு எவரேனுமாளுக்கு அதிகாரமில்லாத ஏதேனும் செய்தியை அல்லது தரவைக் கடத்தும்; அல்லது

(ஈ) தீங்கை அல்லது ஏதேனும் கலைப் பொருளுக்கான அழிவுச்செயலைப் புரியும்,

உட்கருத்துடன் ஏதேனும் கடலடிக் கம்பிவடம், கடலடிக் கம்பிவட இடுகை நிலையம் அல்லது தொலைத்தொடர்பு நிறுவுகை இணைப்பு, கம்பம், ஏதேனும் தொலைத்தொடர்பு முறைமையின் பாகமாகவுள்ள அல்லது அதுதொடர்பில் அல்லது அதுசம்பந்தமாகப் பயன்படுத்தப்பட்ட எத்தகையதுமான வேறு வஸ்து அல்லது இலங்கையினுள் அல்லது இலங்கையின் பிரத்தியேகப் பொருளாதார வலயத்துக்கு வெளியே ஏதேனும் சேவையை வழங்குவதில் கடலடிக் கம்பிவடம் என்பவற்றைச் சேதப்படுத்துகின்ற, அகற்றுகின்ற அல்லது அவற்றோடு கையிடுகின்ற அத்தகைய ஆள் ஒவ்வொருவரும் அதன்காரணமாகத் தவறொன்றைப் புரிகின்றாரென்பதுடன் குற்றத் தீர்ப்பளிக்கப்படுவதன்மேல் நூறு மில்லியன் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது பத்தாண்டுகளை விஞ்சாதவொரு காலத்துக்கு இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும்.”.

**32.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 59 ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:- முதன்மைச் சட்டவாக்கத்தின் 59 ஆம் பிரிவைத் திருத்துதல்

(1) அதன் (1) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன்மூலமும்:-

"(1) எவரேனும் தொலைத்தொடர்பு அலுவலருக்கு அல்லது எவரேனுமாளுக்குத் தொந்தரவை, வசதியீனத்தை அல்லது தேவையற்ற மனக்கவலையை விளைவிக்கும் நோக்கத்துக்காக நியாயமான சாக்கின்றி-

(அ) விடாப்பிடியாகத் தொலைபேசி அழைப்புக் களைச் செய்கின்ற, அல்லது ஒரு தொலைபேசி யைப் பயன்படுத்திச் செய்திகளை அனுப்பு கின்ற அல்லது கடத்துகின்ற; அல்லது

(ஆ) ஏனைய ஒப்பப்பணஞ்செலுத்துநர்களின் தொலைபேசி இலக்கங்களை வெளியிடுகின்ற, அனுப்புகின்ற அல்லது கடத்துகின்ற,

ஆளொவ்வொருவரும் தவறொன்றைப் புரிகின்றா ரென்பதுடன் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மீது ஒரு இலட்சம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கும் அத்தகைய குற்றப்பணத்தைச் செலுத்துவதில் தவணை தவறுகை புரியப்பட்டால் ஆறுமாதங்களை விஞ்சாத வொரு காலத்துக்கு இருவகையிலொருவகை மறியற் றண்டனைக்கும் ஆளாதலும் வேண்டும்."; அத்துடன்

(2) அதன் (2) ஆம் உட்பிரிவில், "சட்டபூர்வமானதாதல் வேண்டும்." என்னும் சொற்களுக்குப் பதிலாக, "சட்டபூர்வமானதாதல் வேண்டும் அல்லது அத்தகைய அழைப்பு எந்தத் தொலைபேசித் தொடுப்பினூடாகச் செய்யப்பட்டதோ அந்தத் தொலைபேசித் தொடுப்பைத் துண்டிப்பதற்கு அவர் முற்படுதல் வேண்டும்." என்னும் சொற்களை இடுவதன்மூலமும்.

*முதன்மைச் சட்டவாக்கத்தில் 59அ மற்றும் 59ஆ என்னும் புதிய பிரிவுகளை உட்புகுத்துதல்*

**33.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 59 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவுகள் இத்தால் உட்புகுத்தப்படு கின்றனவென்பதுடன் இவை அச்சட்டவாக்கத்தின் 59அ மற்றும் 59ஆ என்னும் பிரிவுகளாகப் பயனுறுதலும் வேண்டும்:-

**“ஒரு தொலைபேசியைப் பயன்படுத்திப் பொதுமக்களிடையே கிளர்ச்சியை விளைவித்தல் அல்லது பொதுமக்கள் அமைதியைக் குலைத்தல்**

59அ. பொதுமக்களிடையே கிளர்ச்சியை விளைவிக்கும் அல்லது பொதுமக்களின் அமைதியைக் குலைக்கும் உட்கருத்துடன், வேண்டுமென்று தொலைபேசி அழைப்பொன்றைச் செய்கின்ற அல்லது தொலைபேசியைப் பயன்படுத்தி ஒரு செய்தியை அனுப்புகின்ற அல்லது கடத்துகின்ற ஆளொவ்வொருவரும் தவறொன்றைப் புரிகின்றாரென்பதுடன் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மீது ஒரு மில்லியன் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது மூன்று மாதங்களை விஞ்சாதவொரு காலத்துக்கு இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம் மற்றும் மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் அத்துடன் தவறு தொடர்ந்து புரியப்படும் ஒவ்வொரு நாளுக்கும் ஆயிரத்தைந்நூறு ரூபாவான குற்றப்பணமொன்றுக்கும் அல்லது ஆறுமாதங்களை விஞ்சாததானவொரு காலத்துக்கு இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கும் அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும்.

**பொய்யான கூற்றுக்கள், தகவல்கள் முதலியன**

59ஆ. (அ) இச்சட்டத்தின்கீழான ஏதேனும் தவறு புரியப்படுதல் தொடர்பாக ஏதேனும் பொய்யான அல்லது பிழைவழியுய்க்கும் தகவல்களை அறிந்துகொண்டு கொடுக்கின்ற அல்லது கொடுக்கச் செய்கின்ற; அல்லது

(ஆ) பொய்யான அல்லது பிழைவழியுய்க்கும் தகவல்களை ஆணைக்குழுவுக்கு அல்லது ஆணைக்குழுவுக்கு உதவுவதற்கு நியமிக்கப்பட்ட வேறெவரேனும் அலுவலருக்கு அறிந்துகொண்டு கொடுக்கின்ற அல்லது கொடுக்கச்செய்கின்ற,

எவரேனுமாள் தவறொன்றைப் புரிகின்றாரென்பதுடன் நீதிவானொருவர் முன்னரான சுருக்க விளக்கத்தின்பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மீது ஒரு இலட்சம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது அத்தகைய குற்றப்பணக்கொடுப்பனவில் தவணைதவறுகை புரிந்தால் ஆறுமாதங்களை விஞ்சாதவொரு காலத்துக்கான மறியற்றண்டனைக்கு ஆளாதலும் வேண்டும்.”.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 65 ஆம் பிரிவைத் திருத்துதல்

**34.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 65 ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அதன் (2) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் உட்பிரிவுகளைச் சேர்ப்பதன்மூலமும்:-

“(3) எவரேனுமாள் இச்சட்டத்தின்கீழான தவறொன்றுக்குக் குற்றத்தீர்ப்பளிக்கப்படுமிடத்து அத்தவறு புரியப்படுவதில் அல்லது அது சம்பந்தமாக ஏதேனும் தொலைத்தொடர்பு உபகரணம் அரசுக்கு இழப்பிக்கப்படுதல் வேண்டுமென நீதிவான் கட்டளை ஆக்கலாம்.

(4) நீதிவானின் கட்டளைமூலம் இழப்பிக்கப்பட்ட ஏதேனும் தொலைத்தொடர்பு உபகரணம், அத்தகைய கட்டளை ஆக்கப்பட்டதன்மேல் அரசுக்கு முற்றாக உரித்தாக்கப்படுதல் வேண்டும்.

(5) அத்தகைய உரித்தாக்குகை பின்வருமாறு பயனுறுதல் வேண்டும்:-

(அ) அரசியலமைப்பின் 154ஞ என்னும் உறுப்புரையினால் தாபிக்கப்பட்டவொரு மேல் நீதிமன்றத்துக்கு அல்லது உயர்நீதிமன்றத்துக்கு இழப்பீட்டுக்கான கட்டளைக்கெதிரான மேன்முறையீடொன்று எக்காலப்பகுதியினுள் செய்யப்

படலாமோ அக்காலப்பகுதி முடிவுற்ற பின்னர் மேன்முறையீடெதுவும் செய்யப் படாதிருப்பின்; அல்லது

(ஆ) அரசியலமைப்பின் 154ஞ என்னும் உறுப்புரையினால் தாபிக்கப்பட்டவொரு மேல் நீதிமன்றத்துக்கு அல்லது உயர் நீதிமன்றத்துக்கு இழப்பீட்டுக்கான கட்டளைக்கெதிரான மேன்முறையீ டொன்று செய்யப்பட்டுள்ளவிடத்து, ஒன்றில் இழப்பீட்டுக் கட்டளையை உறுதிப்படுத்தி அல்லது மேன்முறை யீட்டைப் புறத்தொதுக்கி அத்தகைய மேன்முறையீடு தீர்மானிக்கப்படுவதன் மேல்.”; அத்துடன்

(2) அப்பிரிவுக்கான ஓரக்குறிப்பை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன்மூலமும்:-

“நீதிவான் தேடுதல்
ஆணை வழங்குதலும்,
தொலைத்தொடர்பு
உபகரணத்தைக்
கைப்பற்றி
இழப்பித்தலும்”

முதன்மைச் சட்டவாக்கத்தின் 68 ஆம் பிரிவைத் திருத்துதல்

**35.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 68 ஆம் பிரிவு, அதன் (1) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் உட்பிரிவை உட்புகுத்துவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது:-

“(1அ) ஆணைக்குழுவானது, (1) ஆம் உட்பிரிவின்கீழ் அளிக்கப்பட்ட தத்துவத்தின் பொதுமைக்குப் பங்கமின்றி, பின்வருவன தொடர்பிலான விதிகளை ஆக்குவதற்குத் தத்துவமுடையதாதல் வேண்டும்:-

(அ) முறையான இயக்குநர்களுக்கும், வழங்குநருக்கும், உரிமம்பெறுநர்களுக்கும் ஏற்புடையற்பாலனவான செயல்முறைக் கோவைகளை வகுத்தமைத்தல்;

(ஆ) இயக்குநர்களினாலும், வழங்குநர்களினாலும், உரிமம்பெறுநர்களினாலும் கடைப்பிடிக்கப்பட வேண்டிய வழிகாட்டுநெறிகளைக் காலத்துக்குக் காலம் வழங்குதல்; அத்துடன்

(இ) வானொலி அதிர்வெண் நோக்கெல்லையை முகாமை செய்தல்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 73 ஆம் பிரிவைத் திருத்துதல்

**36.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 73 ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) "கம்பிவட இணைப்புவேலை" என்னும் சொல்லமைப் பின் வரைவிலக்கணத்துக்கு நேர்முன்னர் பின்வரும் வரைவிலக்கணங்களை உட்புகுத்துவதன்மூலமும்:-

"தரைப்படை" என்பது, (357 ஆம் அத்தியாயமான) தரைப்படைச் சட்டத்தின்கீழ் திரட்டப்பட்டு பேணப்பட்ட தரைப்படை என்று பொருளாகும்;

"கம்பிவட இடுகை நிலையம்" என்பது, சாவதேசத் தொலைத்தொடர்புகளையும் இணையத்தளத் தொடர்பாடல்களையும் கொண்டுசெல்கின்ற கடலுக்குக் கீழுள்ள நார் ஒளியியற்சார் கம்பிவடங்கள் நிலஞ்சார் வலையமைப்புடன் தொடுக்கப்பட்டுள்ள ஒரு வசதி என்று பொருளாகும்;

(2) "கம்பிவட இணைப்புவேலை" என்னும் சொல்லமைப்பின் வரைவிலக்கணத்தை உடனடுத்துப் பின்வரும் வரைவிலக்கணத்தை உட்புகுத்துவதன் மூலமும்:-

"கரையோரக் காவல் திணைக்களம்" என்பது, 2009 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க, கரையோரக் காவல் திணைக்களச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின்கீழ் தாபிக்கப்பட்ட கரையோரக் காவல் திணைக்களம் என்று பொருளாகும்;

(3) ''பணிப்பாளர் தலைமையதிபதி'' என்னும் சொல்லமைப்பின் வரைவிலக்கணத்தை உடனடுத்துப் பின்வரும் வரைவிலக்கணங்களை உட்புகுத்துவதன் மூலமும்:-

''பிரத்தியேகப் பொருளாதார வலயம்'' என்பது, 1976 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க, கடலோர வலயங்கள் சட்டத்தின் 5 ஆம் பிரிவின்கீழ் வெளிப்படுத்தப்பட்ட ஒரு வலயம் என்று பொருளாகும்;

“உட்கட்டமைப்பு'' என்பது, தொலைத்தொடர்புச் சேவையை வழங்குகின்ற நோக்கத்துக்காகப் பயன்படுத்தப்பட்ட ஓர் இணைப்பு, கடலடிக் கம்பிவடம், விநியோகிப்புப்புள்ளி, வடம், குழி, குடைவழி, ஆள்செல்துவாரம், கோபுரம், பாய்மரம், முனைவு, உணர்கொம்பு, கட்டமைப்பு மற்றும் முனைப்பான வலைத்தளம் என்பனவுட்பட, ஒரு தொலைத் தொடர்பு வசதி என்று பொருளாகும்;”;

(4) “இயக்குநர்'' என்னும் சொல்லமைப்பின் வரைவிலக் கணத்துக்கு உடனடுத்துப் பின்வரும் வரைவிலக் கணங்களை உட்புகுத்துவதன்மூலமும்:-

''ஆள்'' என்பது, ஆட்கள் குழுவொன்றையும் உள்ளடக்கும்;

''பொலிசு அலுவலர்'' என்பது, (53 ஆம் அத்தியாயமான) பொலிசுக் கட்டளைச் சட்டத்தில் அதற்கென குறித்தளிக்கப்பட்ட அதேபொருளைக் கொண்டிருத்தல் வேண் டும்;”;

(5) “விதித்துரைக்கப்பட்ட'' என்னும் சொல்லமைப்பின் வரைவிலக்கணத்தை உடனடுத்துப் பின்வரும் வரைவிலக்கணத்தை உட்புகுத்துவதன்மூலமும்:-

''வழங்குநர்'' என்பது, தொலைத்தொடர்புச் சேவையை அல்லது உட்கட்டமைப்பு

வசதிகளை அல்லது கம்பிவட இடுகை நிலைய வசதிகளை வழங்குவதற்கு 17ஆ என்னும் பிரிவின் கீழான உரிமமொன்றினால் அதிகாரமளிக்கப்பட்ட ஆளொருவர் என்று பொருளாகும்;'';

(6) ''பகிரங்க ஆளியிடப்பட்ட அமைப்பு'' என்னும் சொல்லமைப்பின் வரைவிலக்கணத்தை உடனடுத்துப் பின்வரும் வரைவிலக்கணத்தை உட்புகுத்துவதன் மூலமும்:-

''வானொலி அணுகுகை வலைத்தளம்'' என்பது, ஒரு வானொலி இணைப்பினூடாக முடிவுப் பாவனையாளர் உபாயங்களை மைய வலைத்தளத்துடன் தொடுக்கின்ற ஒரு தொலைத்தொடர்புகள் வலைத்தளத்தின் பாகம் என்று பொருளாகும்;''; அத்துடன்

(7) ''வானொலி அலைக்கற்றை'' என்னும் சொல்லமைப்பின் வரைவிலக்கணத்தை உடனடுத்துப் பின்வரும் வரைவிலக்கணங்களை உட்புகுத்துவதன்மூலமும்:-

''வானொலி அதிர்வெண் வெளியேற்றுகின்ற உபகரணம்'' என்பது, வானொலி அலைவரிசைகளைக் கடத்துவதற்கு அல்லது வெளியேற்றுவதற்கு வடிவமைக்கப்பட்ட அல்லது உட்கருதப்பட்ட ஒரு வானொலித் தொடர்பாடற் சாதனம் என்று பொருளாகும்;

''இலங்கை வான்படை'' என்பது, (359 ஆம் அத்தியாயமான) வான்படைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின்கீழ் திரட்டப்பட்டு பேணப்பட்ட இலங்கை வான்படை என்று பொருளாகும்;

''இலங்கை கடற்படை'' என்பது, (358 ஆம் அத்தியாயமான) கடற்படைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின்கீழ் திரட்டப்பட்டு பேணப்பட்ட இலங்கைக் கடற்படை என்று பொருளாகும்;

"கடலடிக் கம்பிவடங்கள்" என்பது, தொலைத் தொடர்பு சைகைகளைக் கொண்டுசெல்வ தற்கு நில அடிப்படையிலான நிலையங்களுக் கிடையே கடலின்கீழ் இடப்பட்ட ஒரு கம்பிவடம் என்று பொருளாகும்.".

*ஒவ்வாமை ஏற்படும் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்*

**37.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கு இடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.